# ஒளவையார்

## நாடகம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பி. எதிராஜுலு

விற்பனை உரிமை :

பழனியப்பா பிரதர்ஸ்
திருச்சி-2 — சென்னை-5

இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1957.
மூன்றாம் பதிப்பு : ஜூலை, 1960

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 180
நன்கொடை எண்: 180

விலை ரூ. இரண்டு

டி. கே. எஸ். சகோதரர்கள் வெளியீடு.

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

குமுதம் அச்சகம், 76, எல்லீஸ் ரோடு, சென்னை-2.

பண்டிதமணி

## மு. கதிரேச செட்டியாரவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையை நிறுவி அதன் மூலம் நாடகக் கலையை வளர்த்து வரும் திரு. டி. கே. எஸ். சகோதரர்கள் வெளியிட்ட "அவ்வையார்" என்னும் நாடக நூலைப் பார்த்தேன். உண்மையாக நடந்த பழைய வரலாறுகளை மக்கள் அறிவொழுக்கங்களுக்குப் பொருந்தா வண்ணம் பலவாறு திரித்து நாடகமென்னும் பெயரால் எழுதி வெளியிட்டும் நடித்தும் வரும் இக்காலத்தில் அத்தகைய பிறழ்ச்சி ஏதுமின்றிச் செவ்விய முறையில் இந்நாடக நூல் ஆக்கப்பட்டிருப்பதும், இந்நூல் முறை பிறழாமல் டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்து வருவதும் பாராட்டத் தக்கன.

இந்நாடகத்தில் போந்த நாடக மாந்தரின் தகுதிக்கேற்ப பேச்சு முறைகளை ஒழுங்கு செய்திருப்பதும் நாடகத் தலைவியாகிய ஔவையாரின் சிறந்த எண்ணங்களும் அரிய நீதிகளும் பாடல்களும் சிறந்த முறையில் தக்க இடங்களிற் பொருத்தமாக அமைந்திருப்பதும் அறிஞருள்ளத்தை இன்புறுத்துவன. செவ்விய முறையில் இயற்றப்பட்ட இந்நாடகத்தை நடித்துப் புகழ் படைத்து வருபவர்கள் டி. கே. எஸ். சகோதரர்க

ளாவார்கள். இவர்கள் நடிப்பு பல்லாற்ருனும் சிறந்துளதென்பதை நேரிற் கண்டின்புற்ற அறிவுடையார் பலரும் என்னிடம் கூறக் கேட்டு மகிழ்ந்தேன். முறை பிறழாமல் நாடக நூல் அமைப்பதே சிறந்த செயலாகும். அதனினும் சிறந்தது உயர்ந்த முறையில் நடித்துக் காண் போரை இன்புறுத்துவது. இவ்விரண்டிற்கும் சான்ருக இந்நாடகம் விளங்குதலை யறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

முத்தமிழுள் ஒன்ருகிய நாடகத் தமிழைத் தமிழ் நாட்டில் வீறு பெற வளர்த்துவரும் சிறந்த நடிகர்களாகிய திரு. டி. கே. எஸ். சகோதரர்கள் இத்துறையில் மேன்மேலும் புகழ்பெற்று நீடு வாழ்க எனத் தில்லைக்கூத்தன் திருவடிகளை வேண்டுகின்றேன்.

# முகவுரை

அவ்வையாரின் பிறப்பைப் பற்றியும், அப்பெயருடையர் ஒருவரா இருவரா அன்றி மூவரா என்பது பற்றியும் அறிஞர்களின் ஆராய்ச்சிகள் பல. கடைச் சங்ககால அவ்வையார் ஒருவரென்பதும், பிற்கால அவ்வையார் மற்றொருவரென்பதும் சில அறிஞர்கள் கண்ட முடிவு. அவ்வையார் மூவரென்றும், அவர்கள் முறையே சங்ககாலம், சுந்தரமூர்த்தி நாயனர் காலம், கம்பர் காலம் என்றும் சிலர் கூறுவர். ஆனால், செவி வழி வந்த செய்திகளிலும் 'அவ்வையார்' என்னும் பெயரால் அறிஞர்கள் பலர் எழுதியுள்ள நூல்களிலும் அவ்வையாரைப் பற்றிய கதைகள் முழுதும் ஒருவர் பெயராலே தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஆராய்ச்சிக்குரிய ஓர் அவ்வையாரை நாங்கள் அரங்கின்மூலம் அறிமுகப்படுத்த விரும்பவில்லை. அவ்வையார் வாக்கென்று தமிழகத்தில் இன்றுவரை நின்று நிலவி வரும் நன்னெறிகளை இயன்றவரையில் எடுத்துரைக்க வேண்டுமென்பதும், வேற்று மொழிகளுக்கு அடிமையாகிக் கிடக்கும் தமிழர்களுக்குத் தாய்மொழியின் சிறப்பை உணர்த்தி மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் உண்டாக்க வேண்டுமென்பதும் எங்கள் குறிக்கோள். அதற்கேற்ற முறையில், பழைய நாடக இலக்கண விதிகளின்படி **தோன்றுதல், திரிதல், ஒடுங்கல்** என்ற வரம்பினின்றும் முற்றிலும் வேறுபட்ட ஒரு நாடகமாக அவ்வையாரை உருவாக்கினோம். அறிவுரை கூறும் அடிப்படையில் வரலாறுகளைக் கோவைப்படுத்தி இதனை ஆக்கித் தந்தவர் தமிழாசிரியர் **திரு. பி. எதிராஜுலு** அவர்கள்.

அவ்வை நாடக நிகழ்ச்சிகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையன அல்ல. அவ்வைப் பெருமாட்டியையே மையமாக்க் கொண்டு பல்வேறு இடங்களில் நடைபெறும் பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பே இந்நாடகம். கல்வி முறை, அரசு முறை, நீதி முறை, உழவு முறை, இல்லற முறை முதலிய அரிய பெரிய உறுதிப் பொருள்களாகிய மக்களது ஒழுக்க வழக்க நியமங்கள் அனைத்தும் நகைச்சுவையோடு கலந்து இந்நாடகத்தில் தரப்படுகின்றன.

1941-ஆம் ஆண்டில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மூதூரில் தமிழ் மூதாட்டி அவ்வை அரங்கேறினார். அவ்வையாரை எங்கள் நாடக வாழ்வின் வெற்றிச் சின்னமாகக் கருதுகிறோம். தமிழகத்தின் இலக்கியப் புலவர்கள், நாடகமேதைகள், அரசியல் பேரறிஞர்கள், கவிமணிகள், ரசிக மணிகள் அனைவரும் இந்நாடகத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். தமிழகத்திற்கு வந்த வெளிநாட்டுக் கலைக்குழுவினர் பலரும் அவ்வை நாடகத்தைக் கண்டு வியந்துள்ளனர். அவ்வையின் **சமாதானத் தூது** பாரதத் தலைநகரான தில்லி மாநகரில் ஜனாதிபதி பாபு ராஜேந்திரர், பிரதமர் நேரு முதலியோர் முன்னிலையில், நமது ராஜாஜி அவர்கள் நடுவே வீற்றிருந்து மொழி பெயர்த்துச் சொல்லச் சிறப்பாக நடிக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றது. அவ்வையாரைப் பற்றி எழுதாத பத்திரிகைகள் இல்லை. இந்திய நாடக மேடையைப் பற்றி வெளிநாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள நூல்களிலே, கட்டுரைகளிலே அவ்வையாரும் இடம் பெற்றார்.

தமிழ் நாடக உலகில் இறவாத புகழுடைய நாடக மாக, பண்டிதருக்கும் பாமரருக்கும் மகிழ்வூட்டிப் பண்பை வளர்க்கும் நாடகமாக, புகழின் எல்லையைக் கண்ட நாடகமாக **அவ்வையார்** நாடகம் உலக வரலாற் றிலே இடம் பெற்றுவிட்டது. நாடக மேடையைப் பற்றித் தவருக எண்ணிய நல்லவர்கள் உள்ளங்களில் அவ்வை நாடகம் நல்லெண்ணத்தை உண்டாக்கி விட்டது.

1943-ஆம் ஆண்டில் இந்நாடகத்தை நாங்களே நூல் வடிவில் வெளியிட்டோம், அவ்வையின் பாடல் களைத் தவிர இந்நாடகத்தில் **மகாகவி பாரதியார், கவிமணி தேசிகவிநாயகனுர், புரட்சிக்கவி பாரதிதாசன், இசைச் செல்வர் தி. இலக்குமணப் பிள்ளை, கவிஞர் கு. சா. கிருஷ்ண மூர்த்தி** ஆகியோரின் தீஞ்சுவைப் பாடல்கள் பொருத்த மான இடங்களில் எடுத்தாளப் பெற்றிருக்கின்றன. இவற்றைத் தவிர தலைப்பில் பெயர் குறிப்பிடாத சில இனிய பாடல்களை இயற்றியவர் எமது குழுவின் நடிகமணி **பி. எஸ். வெங்கடாசலன்** ஆவார். நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் இந்நாடக நூல் **பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக வைப்பதற்கும்,** கலா சாலை அரங்குகளில் நடிப்பதற்கும் ஏற்றதாக அமைந் துள்ளது.

அன்பு

**டி. கே. சண்முகம்**
*12 - பங்குனி - 1991.*

'அவ்வையகம்'
சென்னை-6

# நாடக உறுப்பினர்

| | |
|---|---|
| அவ்வையார் | நாடகத் தலைவி |
| அங்கவை<br>சங்கவை | பாரியின் மகளிர் |
| குயிலினி | அதியமான் துணைவி |
| அழகம்மை | பாணர் மனைவி |
| மங்காத்தா | குடியானவன் மனைவி |
| பேச்சியாத்தா | உழவன் மனைவி |
| எழினி | ஒரு பெண் |
| சிறுமியர், பாங்கியர், நடன மாதர்கள், வனதேவதை......... | |
| விநாயகர் | முதற் கடவுள் |
| முருகவேள் | தமிழ்க் கடவுள் |
| பாணர் | ஔவையின் வளர்ப்புத் தந்தை |
| சேர, சோழ, பாண்டியர் | தமிழ் மூவேந்தர்கள் |
| அதியமான் | தகட்டூர் மன்னன் |
| தொண்டைமான் | காஞ்சிபுரி மன்னன் |
| பாரி வள்ளல் | பறம்புநாட்டு மன்னன் |
| காரி வள்ளல் | ஒரு செல்வவான் |
| தெய்வீகன் | கோவலூர் மன்னன் |
| பெருஞ்சித்திரனூர் | அதியமான் அவைப்புலவர் |
| கபிலர் | பாரியின் அவைப்புலவர் |
| முனிசாமி | ஒரு உழவன் |

மலைநாட்டரசன், புரோகிதர், குடியானவன், புலவர்கள், அமைச்சர்கள், வீரர்கள், வழிப் போக்கர்கள், கள்வர்கள், நகரமாந்தர் முதலானோர்.

கதை நிகழுமிடம் : தமிழகம்

# ஔவையார்

## காட்சி 1

**இடம் :** பாணர் வீடு

**உறுப்பினர் :** பாணர், அழகம்மை, அவ்வை, புரோகிதர், வேலைக்காரி

[பாணர் ஒரு பாயின் மீது அமர்ந்திருக்கிறார். அழகம்மை அருகில் நின்று கொண்டிருக்கிறாள்]

**பாணர் :** அவ்வையின் கல்வித் திறமையைக் கேள்விப் பட்டு அரசர்களெல்லாம் தத்தம் சபைக்கு அவளையழைத்து வர வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் ஆளனுப்பிக் கொண்டே யிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை.

**அழகம்மை :** நமது குழந்தையின் கல்வியையும் குணத்தையும் புகழாதார் யார்? ஆனால், இப்பொழுது அவளை அரச சபைக்கு அனுப்புவது கூடாது. குழந்தைக்கோ தக்க பருவம் வந்துவிட்டது. திருமணம் முடித்துக் கண்ணால் பார்க்க வேண்டாமா?

**பாணர் :** அதுதான் என் மனத்தில் பெரும் பாரமா யிருந்துகொண்டே துன்புறுத்துகிறது. அவ்வை நமது வளர்ப்புக் குழந்தையென்பது எல்லோருக்கும் தெரியும். அதை யெண்ணியோ என்னவோ,—இதுவரை ஒருவரும் தாமாக விரும்பி வரக் காணேமே. வலியப்போய் வரன் தேடுவது கேவலமல்லவா?

**அழக :** அவளுக்கும் ஒருவன் பிறந்துதானிருப்பான். நமது குழந்தை யென்ன எல்லோருக்கும் கிடைக்கக் கூடியவளா? அவளையடைய பூர்வ புண்ணியம் செய் திருக்கவேண்டுமே!

**பாணர் :** [நகைத்து] "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்." மற்றவர்களுக்கு அது தெரியுமா? நீ எவ்வளவோ அருமையாகச் சீராட்டித் தாலாட்டித்தான் வளர்த்தாய். நாளை ஒருவன் கொண்டுபோய் அவளை அன்பாய் வைத்து நடத்த வேண்டுமே. அழகு, பருவம், குலம் முதலிய வெளிப் பொருத்தங்களை நாம் பார்க்கலாம். அவர்களுக்குள் மனப் பொருத்தம் இருக்கவேண்டுமே. பெண்ணைப் பெற்று வளர்ப்பது பெரிய காரியமல்ல. அவள் தன் வாழ்நாள் முழுதும் இன்ப துன்பமடையக் காரணமாயிருக்கும் திருமணத்தை ஒழுங்காக முடித்து வைப்பதுதான் பெரிய காரியம்.

**அழக :** அவளுக்கு இதைப் பற்றிய நினைவே இருப்ப தாய்த் தெரியவில்லை. எப்பொழுதும் படிப்பதும், எழுது வதும், விநாயகரைத் தொழுவதும்தான் அவளுக்குத் தெரியும்.

[ஒரு வேலைக்காரி வருகிறாள்]

**வேலை :** அம்மா! யாரோ ஒருத்தரு ஐயாவைப் பாக் கணும்னு வந்திருக்காரு.

**பாணர்:** வரச் சொல்லு.

[வேலைக்காரி செல்ல, அழகம்மை உள்ளே போகிறாள். புரோகிதர் வருகிறார்]

வாருங்கள் — இப்படி அமரவேண்டும் — அழகு! தாம்பாளத்தை எடுத்துவா.

[புரோகிதர் பாயின்மீது உட்கார, அழகம்மை வெற்றிலைத் தாம்பாளத்தைக் கொண்டு வந்து வைத்து விட்டுச் செல்கிறாள்]

தாங்கள் யாரோ? பார்த்ததாக நினைவில்லை............ அதுதான்......

**புரோ:** நான் மலைநாட்டு அரசருடைய ஆஸ்தான வித்வான்; நண்பனுங்கூட.

**பாணர்:** அப்படியா!

**புரோ:** தங்கள் பெண் அவ்வையினுடைய கல்வித் திறமையையும், பேரழகையும், மகாராஜா அவர்கள் கேள்விப்பட்டு, என்னையனுப்பிப் பார்த்துவரச் சொன்னார்கள்— தங்களுக்கு அதைப்பற்றி......

**பாணர்:** ஆஹா, தாங்கள் பார்ப்பதற்கென்ன? இதோ வந்து விட்டேன்—

[உட்சென்று திரும்பிவந்து அமருகிறார்]

—இதோ குழந்தை வந்து விடுவாள்—அடடா! தாம்பூலம் போடவேயில்லையே நீங்கள்!

**புரோ:** இருக்கட்டும். பழக்கமில்லை.

**பாணர்:** நன்றாயிருக்கிறது. வந்தவிடத்தில் தாம்பூலம் கூடப் போடாமல் இருக்கலாமோ? ஒரு நாள் போடுவதால் ஒன்றும் கெட்டு விடாது. [உட்புறம்

பார்த்து] அழகு! சீக்கிரம் ஆகட்டும். [புரோகிதரிடம்] பாதகமில்லை போடுங்கள்.

**புரோ :** சரி, நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும் போது......

[தாம்பூலம் போடுகிருர். அவ்வை வந்து புரோகிதரை வணங்குகிருள். அழகம்மாள் ஒருபுறம் நின்று பார்க்கிருள்]

**பாணர் :** இப்படி வாம்மா. பெரியவர் உன் பாட்டைக் கேட்க வேண்டுமென்று விரும்புகிருர். எங்கே ஒரு பாட்டுப் பாடு—

**அவ்வை :** **பைரவி—ஆதி**

பல்லவி

என—துள்ளந்தனில் வாழ்வா யேகம்பனே
இட—ருடனற வரமருள் காரணனே (என)

அநுபல்லவி

எள்ளளவும் மனக் கள்ளமில்லா தவர்
உள்ளுறை வோய் மிகத் தெள்ளிய தேனே (என)

சரணம்

நாதத்திலு முயர்மெய்ப் போதத்திலுந் தமிழ்ச்சங்
கீதத்திலு முறையும் வேதாந்தனே— (என)

அன்புருவே யென்மேல் நண்பிலையோ நிறை
இன்புடனே கருணைக் கண்பா ரன்பே— (என)

**புரோ :** [தலையசைத்து] சரி போதும். அதிக சிரமம் வேண்டாம்.

[அவ்வை புரோகிதரை வணங்கி விட்டு உள்ளே செல்லுகிருள்]

**பாணர் :** ஏதோ மற்றவர்கள் பாடுவதைக் கேட்டுக் குழந்தை பாடுகிறதே தவிர, பிரத்தியேகமான பயிற்சி ஒன்றுமில்லை.

**புரோ :** அடடா! ரொம்ப அபார ஞானம்—சகல லட்சணங்களும் பொருந்தியிருக்கின்றன.........அரசருக்குத் தங்கள் பெண்ணை மணந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலிருக்கிறது. அவரோ நல்ல கல்விமான்; அழகன்; குணவான்.

**பாணர் :** எங்கள் குலத்தைப்பற்றி......

**புரோ :** அதைப்பற்றிக் கவலையில்லை. அரசர்கள் எந்த ஜாதியில் வேண்டுமானாலும் மணஞ் செய்து கொள்ளலாம். அது சாஸ்திர விரோதமல்ல.

**பாணர் :** அது சரி—அவருக்குப் பெண் பிடித்திருக்க வேண்டுமே. அதுவுமல்லாமல்......

**புரோ :** என்ன?

**பாணர் :** அவள் எங்கள் வளர்ப்புப் பெண். பின்னால் கெடுதல் ஒன்றும் ஏற்படக்கூடாது.

**புரோ :** அதற்கு நான் பொறுப்பு. தங்களுக்குச் சம்மதமாயின், நாளையே பெண்ணைப் பார்க்க அரசரை இங்கழைத்து வருகிறேன்.

**பாணர் :** சரி, அப்படியே செய்யுங்கள்.

**புரோ :** அப்பொ—[எழுந்து] நான் வரட்டுமா?

**பாணர் :** [வணங்கி] போய் வாருங்கள்.

[புரோகிதரை வழியனுப்பிவிட்டு, பாணர் உள்ளே செல்லுகிருர்]

**காட்சி முடிவு**

## காட்சி 2

**இடம் :** வீதி

**உறுப்பினர் :** மலை நாட்டரசன், புரோகிதர்

[இருவரும் பேசிக்கொண்டே வருகிறார்கள்]

**புரோ :** அடடா! என்ன அழகு போங்கள். இந்த மாதிரி ஒரு பெண் உலகில் இதுவரை பிறந்தது மில்லை; இனிப் பிறக்கப் போவதுமில்லை.

**அர :** புரோகிதரே! நீர் வீண் புகழ்ச்சி செய்பவர் அல்ல வென்பதுதான் எனக்கு நன்றாய்த் தெரியுமே—

**புரோ :** என் ஒரு நாவினால் எவ்வளவு சொன்னாலும் போதாது. தாங்கள் நேரில் பார்த்தால் தெரியும்.

**அர :** இப்பேர்ப்பட்ட பெண் கிடைப்பாளென்று தெரிந்துதானே நான் என்னை விரும்பி வலிய வந்த ஆயிரக் கணக்கான அழகிகளை அப்படியே தள்ளிவிட்டேன். மற்றெல்லா வகையிலும் எனக்கிணையான பெண்ணா யிருந்தாலும், சங்கீதத் துறையில் எனக்கிணையான பெண் கிடைப்பதென்றால் அது சாத்தியமா ?

**புரோ :** ஆஹா! சந்தேகமென்ன ? நான் அவ்வையின் பாடலைக் கேட்டவுடன் பிரம்மன் தங்களுக்கென்றே அவளைச் சிருஷ்டித்தானோ வென்றே எண்ணிவிட்டேன்.

**அர :** அப்படித்தான் இருக்க வேண்டும். இதை உத்தேசித்துத்தானே நான் பிரம்மாவுக்குத் தனிக் கோயில் ஒன்று கட்டி வைத்தேன்.

**புரோ :** ஆஹா! எவ்வளவு முன்யோசனை!

**அர :** புரோகிதரே! எல்லாம் சரிதான். என்னவிருந் தாலும், பல்லக்கின்றி நான் கால்நடையாய்ச் செல்லுவது......

**புரோ :** ஆடம்பரங்கள் ஒன்றும் வேண்டாமென்று பாணரே வற்புறுத்திக் கூறினர்—அதனுலென்ன ? எப்படி யாவது பெண் நமது கைக்கு வரவேண்டும். அவ்வளவு தானே !

**அர :** ஆமாம். நீர் கூறுவதும் சரிதான். ஆடம்பரம் வேண்டாமென்று பாணர் கூறியது நமக்கு அனுகூலந் தான்—ஏனென்ருல், நான் இங்கு வருகிற விஷயம் முன்பே தெரிந்திருந்தால் சீக்கிரம் காரியம் முடியாது. வழியில் பல இடங்களில் பல்லக்கை நிறுத்திப் பொது ஜனங்களுடைய மாலை மரியாதைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கும்.

**புரோ :** அடேயப்பா ! திருவிழாவைப் போல் கூட்டம் கூடிவிடாதா ! இவ்வளவு நிம்மதியாக வீதியில் நடந்து செல்ல முடியுமா ?

**அர :** வீடு இன்னும் வெகு தொலைவிலிருக்கிறதோ ?

**புரோ :** இதோ கூப்பிடு தூரத்தில் வந்துவிட்டோம்.

**அர :** சரி, நீர் முன்னுல் செல்லும்.

[இருவரும் செல்கிருர்கள் ]

**காட்சி முடிவு**

## காட்சி 3

**இடம் :** பாணர் வீடு.

**உறுப்பினர் :** பாணர், மலைநாட்டரசன், புரோகிதர், அழகம்மை, அவ்வை

[ அவ்வை ஒரு புறம் கவலையுடன் நிற்க, அழகம்மை அவளைத் தேற்றுகிருள் ]

**பாணர் :** அவ்வை! இந்தப் பைத்தியத்தை யெல்லாம் விட்டு விடு. நீ மணஞ்செய்து இல்வாழ்க்கையை இன்புற நடத்த வேண்டுமென்பதே என் விருப்பம்.

**அவ்வை :** அப்பா! நான் அன்றே கூறினேனே, என்னையேன் வருத்துகின்றீர்கள்? இல்லறமென்னும் நீர்ச்சுழலில் அகப்பட்டு அமிழ்ந்து போக எனக்கு விருப்பமில்லை.

**பாணர் :** என் வார்த்தை என்னுவது? இன்னும் சற்றுநேரத்தில் புரோகிதர் அரசரை அழைத்துக்கொண்டு வந்து விடுவாரே! மானம் போய் விடுமே! மலைநாட்டரசன் என்னை எளிதில் விடமாட்டானே!

**அழக :** அம்மா! அப்பா வருத்தப்படுகின்றார் பார். "ஆகட்டும்" என்று சொல்லி அவரைச் சந்தோஷப் படுத்து.

**அவ்வை :** அம்மா! அப்பாவின் சந்தோஷத்திற்காக என்னைப் பலியிட வேண்டுமென்பது தங்களுடைய எண்ணமா?

**அழக :** கண்ணு! "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" யென்று நீதானே உன் தோழிகளுக்குச் சொல்வாய். அதை நீயே மறக்கலாமா?

**அவ்வை :** தாயே! எனது கோரிக்கை நிறைவேற நான் தனிமையாயிருப்பதே நல்லது. மன்னியுங்கள்.

**பாணர் :** [கோபத்துடன்] அவ்வை! நீ எனது பெண். நான் உன் நன்மையையே நாடுபவன். என் மனப்படிதான் நீ நடக்கவேண்டும்......

**அவ்வை :** [திடுக்கிட்டு] அப்பா!

**பாணர் :** ......நான் தீர்மானித்திருக்கும் மணாளனைத் தான் நீ மணந்து கொள்ளவேண்டும்—அரசர் வருவதற்குள் புதுப் புடவையை உடுத்திக்கொண்டு முகமலர்ச்சியுடன் இரு. பிடிவாதம் செய்யாதே—

[போகிறார்]

**அழக :** ஏனம்மா! இந்த மாப்பிள்ளை உனக்குப் பிடிக்க வில்லையா? அப்படியானால் சொல்லு. நான் அப்பாவிடம் சொல்லி வேறு ஏற்பாடு செய்கிறேன்.

**அவ்வை :** அப்படியொன்று மில்லையம்மா—

[பாணர் விரைந்து வருகிறார்]

**பாணர் :** அரசர் வந்துவிட்டார். இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்னைப் பார்க்க இங்கு வருவார். எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. [மனைவியை நோக்கி] அழகு! நீ போய் ஆகவேண்டிய காரியங்களைப் பார்—

**அழக :** குழந்தை இன்னும்—புதுப் புடவை கூடக் கட்டிக் கொள்ளவில்லையே! அரசர் அனுப்பிய சேலையைக் கட்டிக்கொள்ளாவிட்டால் அவர் ஏதாவது நினைத்துக் கொள்ள மாட்டாரா?

**பாணர் :** எல்லாம் அவளுக்குத் தெரியும். அவ்வை! அரசர் அனுப்பிய சேலையை உடுத்திக்கொள்ளம்மா. அழகு! நீ போய் ஒரு தாம்பாளத்தில் பால் பழம் எல்லாவற்றையும் எடுத்துவை—

[அழகு உள்ளே செல்ல, பாணர் வெளியே போகிறார்]

**அவ்வை :** [தனிமொழி] தேவ தேவா! என்னைக் காப்பது நினது கடன். எனதெண்ணம் ஈடேறுவதற்கு இடையூறாயிருப்பது என் திருமணம். என் திருமணத்திற்குக் காரணமாயிருப்பது இளமையும் அழகும்.

இவ்வுடலைக் கண்டன்றோ எல்லோரும் விரும்புகின்றனர்! "என் கடன் பணிசெய்து கிடப்பது;" ஊழியக்காரி; பிறருக்குத் தொண்டு செய்யப் பிறந்தவள். எனக்கேன் அழகும் இளமையும்? இவை எனக்கிருக்கும்வரை பிறருடைய துன்புறுத்தலுக்கு ஆளாக வேண்டித்தான் நேரிடும். ஆகவே, என் எண்ணத்திற்கும் இன்பத்திற்கும் தடையாயிருக்கும் இவ்விளமைப் பருவத்தைப் போக்கி, கவலையின்றி எங்கும் செல்லக்கூடிய கிழப் பருவத்தைத் தந்தருள வேண்டும்.

[கூடத்திலிருக்கும் பூஜை மண்டபத்தருகில் சென்று விநாயகர் சிலையின்முன் மண்டியிட்டு வணங்குகிறாள்.]

**அவ்வை:** **கௌளை - ஆதி.**

பல்லவி

பாதார விந்தமே பணிகுவனே
பாரில் ஏழை துன்பம் தீர மார்க்கம் சொல்லுன்— (பா)

அனுபல்லவி

போதமேயருள் புரையறவே
பூதலம் புகழ்கண நாதா நானுனிரு— (பா)

சரணம்

பார்வதி பாலக பரிவுடனே
பாவி நான் செய்தவப் பயன் பெறவே
கோருங்காரியம் குண முறவே
கூரின் கருணையெந்தன் பேரிலங்கரனே— (பா)

[அவ்வை பாடிக்கொண்டிருக்கும்போது விநாயகர் தோன்றி ஆசீர்வதிக்க, அவ்வை கிழப்பருவம் அடைகிறாள். புரோகிதரும் அரசனும் வருகிறார்கள்]

**அர :** புரோகிதரே! குயிலின் குரலென்று நீர் கூறினீரே, அது உண்மைதானா?

**புரோ :** தாங்களே நேரில் கேட்கப் போகின்றீர்களே. தங்களுடைய வெங்கலத்வனிக்கும், அவ்வையின் கோகில த்வனிக்கும் வெகு பொருத்தம்.

**அர :** ஆமாம்...பெண் எங்கே? பாணர் இங்கிருப்ப தாகத்தானே சொன்னார்?

**புரோ :** இதோ மண்டியிட்டபடி இருக்கிறாளே. இவள் தான்.

**அர :** ஆஹா! என்ன அழகு! புரோகிதரே! பெண் பார்ப்பதில் உமக்கிணை எவருமேயில்லை. அடாடா! பின்னழகே இப்படியிருந்தால் முகத்தின் அழகைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

**புரோ :** முகத்தின் தேஜஸ் முதுகிலேயே தெரி கிறதே!

**அர :** [தயக்கத்துடன்] நான் முன்னால் போய்ப் பார்க்கலாமா?

**புரோ :** தாராளமாய்ப் பார்க்கலாம். சமூகத்திற்கு மனைவியாகப் போகிற மங்கைதானே! பாதகமில்லை.

**அர :** ஒருவேளை என்னைக் கண்டவுடனே எழுந்து ஓடிவிட்டால்...?

**புரோ :** சே! படித்த பெண்ணல்லவா! அப்படிக் கூச்சப்பட மாட்டாள். அன்றியும், தங்கள் திருவுருவைக் கண்டவுடன் மதுவுண்ட வண்டுபோல் மயங்கிவிடுவா ளென்றே நினைக்கிறேன்.

**அர :** எனக்கே நாணமாயிருக்கிறதையா.

**புரோ :** அது பெண்மையின் அறிகுறியல்லவா? ஆண்மைக்கு நாணம் கூடுமோ?

**அர :** ஆமையா, நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினீர்!

[தயக்கத்துடன் அவ்வையின் முன் சென்று அவள் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டுப் பின்வாங்குகிறான். புரோகிதர் ஒன்றுந் தெரியாது விழிக்கிறார்.]

**அர :** ஓய்! யாரோ கிழவிபோல் இருக்கிறதையா!

**புரோ :** [வியப்புடன்] என்ன அது? கிழவியா!

[முன் சென்று பார்த்துத் திகைப்புற்று நிற்கிறார்.]

**அர :** புரோகிதரே! என்னை ஏமாற்றவா இப்படிச் செய்தீர்?

**புரோ :** [பயத்துடன்] இல்லை மகாராஜா! தவறு நடந்திருக்கிறது. பெண் வேறு அறையிலிருக்க வேண்டும். இந்தக் கிழவிக்குப் பெண்ணின் முகச்சாயல் இருக்கிறது. ஒருவேளை பெண்ணின் பாட்டியாய் இருக்கலாம்.

[அவ்வை எழுந்து நின்று வியப்புடன் அரசனைப் பார்க்கிறாள்]

**புரோ :** பாட்டீ! பாணருடைய பெண் எங்கே? மகாராஜா பார்க்க வந்திருக்கிறார்கள்.

**அவ்வை :** யார்?

**புரோ :** பாணருடைய பெண் அவ்வை......

**அவ்வை :** நான்தான் அவ்வை. நான்தான் பாணருடைய பெண். என்னையன்றி அவருக்கு வேறு பெண்ணே கிடையாதே!

**அர :** [திகைப்புடன்] பாணருடைய பெண் அவ்வையா?

**அவ்வை :** ஆம்.

**அர:** ஐயையோ!

[அரசனும் புரோகிதரும் மிரள விழிக்கிருர்கள்]

**அர:** ஓய்! நல்ல பெண்ணைப் பார்த்தீரையா. இந்தக் கிழவியைக் காணவா நான் இவ்வளவு தூரம் வந்தேன்?

**புரோ:** இல்லை மகாராஜா.........

**அர:** [கோபத்துடன்] என்னையா இல்லை மகாராஜா —அறுபதுக்கறுபது கல்யாணமென்று நினைத்தீரோ? போதும் போதும் நீர் பெண் பார்த்த அழகு! புறப்படும் உடனே.

**புரோ:** இல்லை மகாராஜா! ஏதோ சூது நடந்திருக்கிறது. இதைத் தீர விசாரித்தறிய வேண்டும்.

**அர:** என்னங்காணும் விசாரிப்பது? விஷயம் வெளிக்குத் தெரிந்தால் மானம் போய்விடும். எல்லாம் ஊருக்குப் போய் விசாரிப்போம்.

[அரசன் முன்னல் ஓட, புரோகிதர் பின்னல் செல்கிருர் — அவ்வை நகைக்கிருள் — பாணர் "அவ்வை! அவ்வை!!" என்று கூச்சலிட்ட வண்ணம் ஓடி வருகிருர். மற்ருெரு புறத்திலிருந்து அழகம்மை வருகிருள். இருவரும் கிழப்பருவத்தில் நிற்கும் அவ்வையைக் கண்டு வியந்து நிற்கின்றனர்]

**அவ்வை:** அம்மா! அப்பா! தங்கள் பெண் ஔவை தான் முன்னிற்கிருள். ஐயுற வேண்டாம்.

**பாணர்:** ஐயோ, இதென்ன கோலம்!

**அழ:** எங்களுக்கொன்றும் விளங்கவில்லையே!

**அவ்வை:** அம்மையே! அப்பா! என் கோரிக்கையை ஈடேற்றுவதற்குத் தடையாயிருந்த இளமையை எம்பிரா

னிடம் ஒப்படைத்துவிட்டேன். அடியவர்கள் கோரியவற்றை யெல்லாம் அன்புடனளிக்கும் அன்பன், எனதண்ணல், இவ்வுருவளித்துதவினன். இனி யான் உங்களுடனிருக்க வியலாது. இகபர வழிகளுக்கான அறத்தினையுணர்த்தியும், இன்பந்தரும் கல்வியின் சிறப்பினை மக்களிடையே பரப்பியும், எனது வாழ்நாட்களைக் கழிக்கத் துணிந்துவிட்டேன். விடையளியுங்கள்.

**அழ:** [கதறியழுது] ஐயோ! கண்ணே, என் எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டாயே. நீ மணஞ்செய்து குழந்தை குட்டிகளைப் பெற்று, ஆனந்தமாக இருப்பதைப் பார்க்கலாமென்றிருந்தேனே. இப்படி மோசம் செய்துவிட்டாயே!

**அவ்வை:** தாயே! துயருற வேண்டா. நான் புகழுடம்போடு வாழ விரும்புகிறேன். தோன்றித் தோன்றி மறையும் கோடானுகோடி மக்களில் நானும் ஒருத்தியாய்ப் போவது உங்களுக்கும் சிறப்பைத் தராது. எனக்கும் சிறப்பைத் தராது. இல்லறவின்பங்களில் அடைதற்கரிய பேரின்ப நிலையை நான் அடையப் போகிறேன். எனினும், அடிக்கடி இங்கு வருவேன். வருந்தல் வேண்டா.

**பாணர்:** [மனைவியை நோக்கி] பெண்ணே! அழாதே. விசனத்தை விடு. அவ்வை சாதாரணமான பெண்ணன்று. பரமனருள் பெற்றவள். அவள் ஏதோ காரணம் பற்றியே நமக்குப் பெண்ணாய் வந்தாள். அவ்வளவே நாம் செய்த பாக்கியம். இனி அவளைத் தடுப்பதில் பயனில்லை. (அவ்வையை நோக்கி) அம்மா! உன் விருப்பம்போல் நடக்கக் கடவாய்.

**அவ்வை :** அம்மையே! அப்பா! வணக்கம். சென்று வருகிறேன்.

[தலை வணங்குகிருள்]

**காட்சி முடிவு**

# ஔவையும் குடியானவனும்

## காட்சி 4

**இடம்:** *ஊர்ப்புறம்*

**உறுப்பினர்:** *அவ்வை, குடியானவன்*

*[அவ்வை பாடிக்கொண்டே வருகிறாள்]*

**அவ்வை :** **தன்யாசி—ஆதி**

**வெண்பா**

ஒருநா ளுணவை ஒழியென்றா லொழியாய்
இருநாளைக்(கு) ஏலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. (ஒரு)

*[குடியானவன் எதிர்ப்புறமாக வருகிறான்]*

**அவ்வை:** *அப்பா! சற்று நில்.*

**குடி:** *[நின்று] ஏம்மா?*

**அவ்வை:** வேறொன்றுமில்லை; மிகுந்த பசியாயிருக்கிறது. கதிரோன் மலைவாயில் விழுங்காலமாய் விட்டது. காலையிலிருந்து நீண்ட தொலை நடந்து களைத்து விட்டேன்.

**குடி:** நீங்க எங்கம்மா போறிங்க?

**அவ்:** வள்ளலாகிய அதிகமானைக் காணப் போகிறேன்.

**குடி:** அடேயப்பா! வெகு தொலையிருக்கே, நடந்து போக முடியுங்களாம்மா?

**அவ்:** சிறிது உணவளித்தால் உண்டு களைப்பாறி எவ்வளவு தொலையாயிருப்பினும், எந்த நேரமாயிருப்பினும் நடந்தே போய்விடுவேனப்பா.

குடி: சோறு கேக்கிறிங்க? — [தனக்குள்] ஐயோ பாவம்! இந்தக் கெழவியம்மாவைப் பாத்தா பரிதாபமா இருக்கு. எம் பொண்டாட்டியை நினைச்சாலோ பகீரிங்குது. என்ன செய்யிறது—[யோசிக்கிறுன்]

அவ்: என்னப்பா! இல்லையோ?

குடி: என்னம்மா இப்பிடிச் சொல்லிட்டிங்களே. ஓங்களைப் போல நூறு பேரு வந்தாலும் நான் இல்லேண்ணு சொல்லுவேனு? வாங்க—தாராளமாகச் சாப்பிடலாம். [தனக்குள்] என்ன வந்தாலும் வரட்டும்.

[குடியானவன் முன்னே செல்ல அவ்வை பின் தொடருகிருள்]

**காட்சி முடிவு**

## காட்சி 5

**இடம்:** குடியானவன் வீடு

**உறுப்பினர்:** குடியானவன், அவ்வை, மங்காத்தா

[குடியானவன் அவ்வையை அழைத்து வந்து திண்ணையில் உட்காரவைத்துவிட்டு உட்செல்ல, மங்காத்தா வெளியே வருகிருள்]

மங்: எங்கே போகலியா? போன மச்சான் திரும்பி வந்தாங்கற மாதிரி வந்துட்டியே—

குடி: சகுனம் சரியாயில்லே. அதான் திரும்பிட்டேன். நாளைக்குப் போனுப் போச்சு. (அருகில் நெருங்கி) ஆமா, பொழுது சாயிற வேளையாச்சே; தலையைக் கிலையைச் சீவி, பொட்டுகிட்டு வச்சுக்கப்படாதா?

மங்: வீட்டு வேலையை விழுந்து விழுந்து செய்யவே நேரம் சரியாயிருக்கு; எங்கே தலையைச் சீவுறது?

குடி : பூ! இதுதானு பெரிய வேலே? நான் எதுக்காக இருக்கேன்? நீ சொல்ற வேலையெல்லாம் செய்யத்தானே? சீப்பை எடுத்துக்கிட்டு வா. நான் தலே சீவிக் கொண்டை போட்டு விடறேன்.

மங் : சீப்பை நான் எடுத்து ஒங்கையிலே...

குடி : இல்லே, இல்லே, நானே எடுத்துக்கிட்டு வர்றேன்.

[உள்ளே போய்ச் சீப்பை எடுத்துக்கொண்டு வருகிறுன்]

குடி : ஆமா, எங்கே அந்த சந்தனுறித் தைலம்?

மங் : சந்தனுதியா! எங்கே வாங்கி வச்சிருக்கு? நீ வாங்கியாந்தது வேப்பெண்ணெயில்லே—

குடி : அதுதான் சந்தெ நாறி.

மங் : அந்த எண்ணே ஒரே நாத்தமா நாறுது. எனக்கு வேணும்.

குடி : ஓடம்புக்கு ரொம்பக் குளிர்ச்சி.

மங் : நீ தடவிக்கோ. எனக்கு வேறே எண்ணே வாங்கியா!

குடி : சரி போவுது. இப்போத்தான் தலேயிலே எண்ணெயிருக்கே. உக்காரு சீவுறேன்—

[மங்காத்தா உட்கார, குடியானவன் தலே வாருகிறுன்]

மங் : மொள்ளச் சீவு, தலே வலிக்கிறது.

குடி : ஆஹா! எம்பிட்டு நீளமான முடி! ஒன் தலே யழகு ஒண்ணே போதுமே. இதைப் பார்த்துக்கிட்டிருந் தாலே எனக்குப் பசியெடுக்காதே. என்ன கறுப்பு! அடடா! தலேயா இது?

மங் : எங்கப்பன் வீட்டிலே இருக்கும்போது இன்னும் ரொம்ப நீளமாயிருந்தது—

குடி: ஒரு அறுவது மொழம் இருக்குமா ?

மங் : இங்கே வந்து இந்த உப்புத்தண்ணி புடிக்காமே எல்லாம் உதிந்து போச்சு.

குடி : ஆமா. ஆமா. தெரியுதே! நீ முந்திக்கு இப்போ ஆளுகூடக் கொஞ்சம் கறுத்துத்தான் போயிட்டே. என்ன செய்யிறது! பொழுதண்ணைக்கும் வேலே செஞ்சு, செஞ்சு, ஓங்கையெல்லாம் காப்புக்கண்டு போச்சு—இன்னமே நீ ஒரு வேலேயும் செய்யவாணும். எல்லா வேலேயும் நான் செய்து தர்றேன்.

மங் : சரி, சரி. தலேயை வாரு.

குடி : ஐயையோ! ஒரே ஈரும் பேனுமாவில்ல இருக்கு! சரிதான். அதுதான் ஒடம்பிலே ரத்தம் சுண்டிப் போச்சு.

[ஈர்க்கோலியால் உருவி, பேன் பார்த்து, வகிடு எடுத்துத் தலேவாரிக் கொண்டை போடுகிருன்.]

குடி : இப்பொ எப்படியிருக்கு? கண்ணுடியிலே பாரு. ஊர்வேசி மாதிரியில்லே?.........ஓங்கிட்ட.........ஒண்ணு சொல்லணும்ணு நெனேச்சேன்—மறந்துட்டேன்......

மங்: நீ சொல்லப் போறது எனக்குத் தெரியும். இப்போ கோவிலுக்கு வர என்னுலே முடியாது. கூத்துப் பாக்கண்ணு வர்றேன்.

குடி: சரி, கூத்துப் பாக்கவே போகலாம்—அது அப்புறம்......இப்பொ......

மங்: இப்பொ என்ன?

குடி: [பயந்து] ஒண்ணுமில்லே—

மங்: ஒண்ணுமில்லேயா—பின்னே ஏன் பல்லே இளிக்கிறே?

குடி: அதுக்குள்ளாற கோவம் வந்துடுச்சா?

மங்: கோவம் ஒண்ணுமில்லே, சொல்லு.

குடி: நெசமா?

மங்: ஏது, சத்தியங்கூடப் பண்ணச் சொல்லுவே போலயிருக்கே.

குடி: சே—ஒன்னைச் சத்தியம் பண்ணச் சொல்ல எனக்கு அவ்வளவு தைரியம் இருக்கா?

மங்: பின்னே சொல்லேன்.

குடி: நான் வந்து வெளியே போனேம் பாரு—

மங்: நீ போனதைத்தான் பாத்தாச்சே. அப்புறம்?

குடி: நம்ம வீட்டுக்குப் பக்கத்திலே...ஒரு...ஐயோ பாவம்—

மங்: ஆமா, ரெண்டு கையையும் விரிச்சா ஒரு பாவம்—

குடி: தள்ளாத வயசு...ஒரு கெழவி...பசியோட...

மங்: என்னது?

குடி: ஆமா, ஒரு கெழவி பசியோட இருக்கிறு—ஒரு வேளை "விருந்து" அவளுக்கு...நல்ல தருமம்...புண்ணியங் கெடைக்கும்.

மங்: [கோபத்தோடு] தருமமா?—நீ கெட்ட கேட்டுக்குத் தருமம் வேறையா? "தகப்பனுக்குக் கட்ட கோவணமில்லே, பிள்ளை தஞ்சாவூர் மட்டும் நடை பாவாடை போடச் சொன்னனும்." அதுமாதிரி உன் யோக்கியதைக்குத் தருமமா? நீ சம்பாதிச்சுப் போடுற அழகு தெரியாதா? உன் எழவுக்கு ஒனக்கு வடிச்சுக் கொட்றது போதாதா? ஊருக்கெல்லாம் தானம் வழங்கணுமா? இதென்ன அன்ன சத்திரமா? கொஞ்சங்கூடப் பயமில்லாமே...[அங்குமிங்கும்

பார்த்து ஒரு பழைய முறத்தைக் கையிலெடுத்து]—அவ்வளவு துணிச்சலா?

[முறத்தால் அவனையடிக்க, குடியானவன் பயந்து ஓடுகிறன். வெளியிலிருந்தபடி இதைக் கவனித்துக் கொண்டிருந்த அவ்வை நகைக்கிருள். மங்காத்தா உள்ளே போகிருள்.]

**அவ்வை:** அடடா! எவ்வளவு அரும்பாடு பட்டான்! எத்துணை இனிய மொழிகள் கூறினுன்!

### வெண்பா

இருந்து முகந்திருத்தி ஈரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினுள் பாடினுள் ஆடிப் பழமுறத்தால்
சாடினுள் ஓடோடத் தான்.

[குடியானவன் வருகிருன்]

**அவ்வை:** அப்பா! நடந்தவையனைத்தும் அறிந்தேன். வருந்தாதே—ஐயோ! எனக்காக நீ எவ்வளவு அரும்பாடு பட்டாயப்பா—

**குடி:** [கண்கலங்க] அம்மா! நான் பாடுபட்டது ஒரு பெரிசில்லிங்க; இவ்வளவு செய்தும் ஓங்க பசியைத் தீர்க்க முடியாமப் போச்சேண்ணுதான் கவலைப்படறேன்.

**அவ்வை:** [அன்புடன்] நீயென்ன செய்வாயப்பா—உன் மீது குற்றமில்லை. உனது அன்புக்கும் பண்புக்கும், இப் பெண் பேயா உனக்கு மனையாட்டியாக வந்து வாய்க்க வேண்டும்?

### வெண்பா

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டா!
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுக நேர்!

**குடி:** நான் என்ன தாயே செய்யிறது?—பிடாரியா யிருக்கா—மானத்துக்கஞ்சி, சொல்லவும் முடியாமே, மெல்ல வும் முடியாமே முழிக்கிறேனுங்க. இதுக்கு ஒரு வழியு மில்லையா?

**அவ்வை:** அப்பா! இல்லறமென்பது எளிதில் கிடைப்ப தன்று; புருடன், மனைவி இருவரும் உள்ளம், வாக்கு, காயங் களால் ஒன்றுபட்டு இழுத்துச் செல்லும் இரட்டைக் காளை கள் பூட்டிய வண்டி போன்றது. சுற்றந் தழுவி, விருந் தோம்பி, ஏழைகட்குதவி, ஈகை புரிதலே இல்வாழ் வான் கடமை. கணவனும் மனைவியும் ஒன்றுபட்ட உளத் தினராய் வாழ்ந்திலரேல் அவ்வில்லறம் பாழ் நரகிற்கொப் பாகும்—

''தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்''

—உனது இல்வாழ்க்கை சீரிய வழியில் செல்வதாய்த் தெரியவில்லை. கேவலம் சிற்றின்ப நுகர்ச்சிக்காக மட்டும் இல்லறம் நடத்துவது அறிவீனம். இல்லறத்திலிருந்து பேரின்ப வீடு பெற வழியில்லாவிட்டால் அவ்வில்லறத் தைத் துறப்பதே அறிவுடைமையாகும்.

## வெண்பா

பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பளே யாமாயிற்
கூறுமற் சன்யாசம் கொள்!

—என்றபடி உன்னுடைய இந்த இல்வாழ்க்கையை விடத் துறவு பூணுதல் சாலச் சிறந்தது.

**குடி:** [கை கூப்பி] தாயே! மூடியிருந்த என் கண்ணைத் தெறந்து விட்டிங்க; நீங்க நல்லாயிருக்கணும். இத்தினி நாள் இந்த புலிக் கொகையிலே அடைபட்டுத் தப்ப வழியில்லாமே

தவிச்சிக்கிட்டிருந்தேனுங்க. இப்பத்தானுங்க புத்தி வந்தது ஆனாலும் ஓங்க பசி......

**அவ்வை:** அப்பனே! உனது வருந்தத்தக்க நிலையைக் கண்டவுடனேயே என் பசியெல்லாம் பறந்தோடி விட்டது. இந்த அம்மையார் கையினால் யான் அமுதுண்ணுவேனாயின், என் பசியடங்காது. ஏன் தெரியுமா?

ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழ மொடுபாலன்னம் முகங்கடுத் திடுவராயின்
கப்பிய பசியினோடு கடும்பசியாகுந் தானே.

[போகிறாள்]

**காட்சி முடிவு**

---

## ஔவையும், அதிகமானும்

---

### காட்சி 6

**இடம்:** அரண்மனை

**உறுப்பினர்:** பெருஞ்சித்திரனார், மந்திரி, அவ்வை, அதிகமான், காவலன்

[பெருஞ்சித்திரனாரும், மந்திரியும் பேசிக்கொண்டு இருக்கின்றனர்]

**பெருஞ்:** அரசர் போய் இரண்டு நாட்களாகியும் திரும்பிவராத காரணமென்ன?

**மந்திரி:** உடனே திரும்பி விடுவதாகத்தான் கூறிச் சென்றார். விவரமொன்றும் தெரியவில்லை.

**பெருஞ்:** கூட ஒருவரும் செல்லவில்லையோ?

**மந்:** இல்லை—தனியே குதிரைமீதமர்ந்து சென்றார்.

[ஒரு காவலன் வருகிறான்]

**காவலன் :** பிரபோ! யாரோ ஒரு கிழவி மகாராஜாவைக் காண வந்திருக்கிறார்கள்.

**மந் :** அழைத்து வா.

[காவலன் உட்செல்ல, அவ்வை மிகுந்த களைப்புடன் நடந்து வருகிறாள். பெருஞ்சித்திரனார் விரைந்தெழுந்து வணங்கி]

**பெருஞ் :** ஆ! தாங்களா!! அம்மையே! வரவேண்டும். வரவேண்டும். (மந்திரியை நோக்கி) இவ்வம்மையார் யாரென்றறியீரோ! இவர்தான் கல்விக் கடல் அவ்வைப் பிராட்டியார்—

**மந் :** [வணங்கி] அம்மையே! வணக்கம். அமருங்கள்.

[அவ்வை அமருகிறாள்]

—தாயே! தெய்வத் தன்மை பொருந்திய தங்கள் செய்யுட்களைப் பற்றியும், தங்களைப் பற்றியும், கேள்விப் பட்டிருக்கிறோம்; ஆயினும் இன்றே தங்களை நேரில் காணும் பாக்கியம் கிடைத்தது.

**பெரு :** அரசருக்குக்கூடத் தங்களைக் காணவேண்டுமென்ற ஆவல் அதிகமுண்டு. கொடை வள்ளலாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் விருந்தினராகத் தாங்கள் சில நாட்கள் இங்கு இருக்க வேண்டும்.

**மந் :** மன்னர் உங்களைக் கண்டால் மிகவும் மகிழ்ச்சி அடைவார்.

**அவ்வை :** அரசர் இப்பொழுது இங்கில்லையோ?

**மந் :** இல்லை. விரைவில் வந்து விடுவார்.

**அவ்வை :** [எழுந்து] என்னை மன்னியுங்கள். பிறிதொரு சமயம் வந்து கண்டு கொள்கிறேன்.

[போக முயல, மற்றொருபுறத்திலிருந்து அதிகமான் வருகிறான்]

**மந் :** இதோ மன்னரே வந்துவிட்டார். (அதிகமானை நோக்கி) வேந்தே! தங்களைக் காண அவ்வைப் பிராட்டியார் வந்திருக்கிறார்கள்.

**அதி :** [வியப்புற்று, மகிழ்ச்சியுடன்] அப்படியா! அம்மையே, வரவேண்டும்; வந்து நெடுநேரமாயிற்றோ?

**பெரு :** இப்பொழுதுதான் வந்தார்கள். நடந்து வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மிகுந்த களைப்புற்றுக் காணப்படுகிறார்கள்.

**அதி :** [அன்புடன்] தாயே! இதைப் புசியுங்கள்—தங்கள் களைப்பு நீங்கும்.

[தன்னிடமிருந்த 'கரு நெல்லிக் கனி' ஒன்றை அவ்வையிடம் கொடுக்கிறான். அவ்வை அதனைப் புசித்து, அயர்வு நீங்கி அமருகிறாள்]

**அவ்வை :** வள்ளல் பெரும! இக்கனி மிக்க இனிப்பாயிருக்கின்றது. எனது நா இந்நாள்வரை இத்தகைய சுவையை அறிந்திலது. இது உனக்கு எங்கு கிடைத்தது?

**அதி :** அம்மையே! இதை நானே பறித்து வந்தேன்-வெகு நாட்களாக எனக்கோர் ஆசையிருந்தது. உலகில் பிறப்பவரெல்லாம் இறப்பது சகஜமாயிருக்கிறதே; மரணத்தை வெல்ல வழியொன்றுமில்லையாவென்று என்னிடம் வரும் பெரியோர்களையெல்லாம் நான் கேட்பது வழக்கம். எல்லோரும் அதுவே இயற்கையென்று சொல்லிப் போனார்கள். ஒரே ஒரு பெரியார் மட்டும் இறப்பை அறவே தவிர்ப்பது இயலாத காரியமென்றும் ஆனால்—நீண்ட நாள் பிணி மூப்பின்றி வாழ முடியும் என்றும் கூறினார்.

**அவ்வை :** அப்படியா! எப்படி?

**அதி** பக்கத்தில் தோன்றும் எனது குதிரைமலைச் சரிவில் பல ஆண்டுகளுக் கொருமுறை பலன் தரக்கூடிய

கருநெல்லி மரம் ஒன்று இருப்பதாகவும், அதன் கனியை உண்டால் நீண்டநாள் பிணி மூப்பின்றி வாழலாமென்றும் கூறிச் சென்றார்; அது முதல் நான் என்னுயிரையும் பொருட் படுத்தாமல் பலமுறை அம்மலைச் சரிவுக்குச் சென்று பரிசோதித்து வந்தேன்; கடைசியாக நேற்றுத்தான் அம்மரத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. தாங்கள் உண்ட ஒரே கனிதான் அம்மரத்திலிருந்தது.

அவ்வை: (மயிர்க் கூச்செறிந்தவராய், அன்பு ததும்பும் குரலில்) ஆஹா! என்னே நினது வள்ளற் றன்மை! என்னுள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியை வாயினாற் புகல முடியவில்லையே. ஏ, கொடை வள்ளலே! நின்போன்ற ஈகையாளர்களன்றோ உலகின்கண் நெடுங் காலம் வாழ்ந்திருக்க வேண்டியவர்கள். கேவலம் நானிருந்து ஆகவேண்டியதென்ன? இக்கனியின் வரலாற் றினைக்கூடக் கூறாமல் என்னிடம் கொடுத்து உண்ணச் செய்தனையே; இது முறையா?

அதி: [குறுநகையுடன்] தெய்விகப் புலமை வாய்ந்த அம்மையே! இக் கனியை நானே புசிக்க எண்ணித்தான் பறித்து வந்தேன்; தங்களைக் கண்டதும் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்—நான் இக்கனியை உண்ணுவதால் யாருக்கு என்ன பயன்? புலவர்களுக்கும், வறியவர்களுக்கும், பொருட்களை வாரி வாரிக் கொடுக்கும் வள்ளலென்று உலகோர் என்னைப் புகழ்வதால், நான் நீண்ட நாள் இருக்க வேண்டுமெனத் தாங்கள் விரும்பு கிறீர்கள்; "செல்வம் சகடக்கால் போல வரும்" என்பது உலகறிந்த உண்மையன்றோ? நாளை இச்செல்வம் போனால், என்னால் உலகுக்கு என்ன நன்மையேற்படப் போகிறது. தங்களிடமோ கல்விச் செல்வம் இருக் கிறது. நான் கொடுக்கும் செல்வம் அழியுந்தன்மை உள்ளது. தாங்கள் கொடுக்கும் செல்வமோ ஏழேழு

பிறவிக்கும் மக்களுக்கு நன்மையைச் செய்யக் கூடியது. அதுபற்றியே கனியைத் தங்களுக்கீந்தேன் தாயே.

**அவ்வை :** [களிப்பில் திளைத்தவராய்] வள்ளலே! நினது பெருந்தகைமையை என்னென்று புகழ்வேன்! கேவலம் நீரிற் குமிழி போன்ற இவ்வுடலைப் பிறருக்கு எவ்விதப் பயனுமின்றி, இம்மண்ணிடை வைத்திருப்ப தற்காக மட்டும், தந்நலம் கருதி மக்கள் செய்யும் கொடுமைகள் எத்தனை! கொலை, களவு, பொய், வஞ்சனை முதலிய தீச்செயல்கள் யாவும் தந்நலம் பேணிச் செய்யும் செயல்களன்றோ? இத்தகைய மக்கட்கிடையே, தந்நலம் சிறிதுமின்றி, "தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாய்" விளங்கா நின்ற மாபெரும் வள்ளலாகிய நின்னைக் கண்டது எனது பெரும் பேறென்றே எண்ணுகிறேன்.

**அதி :** தாயே! தாங்கள் என்றும் அடியேனுடைய மாளிகையைத் தங்கள் இருப்பிடமாகக் கொள்ளலாம்.

**பெரு :** ஆம்; எனது வேண்டுகோளும் அதுவே.

**அவ்வை :** புலவர் பெரும, நுமது அன்பிற்கு வணக்கம். [மன்னனை நோக்கி] அன்பனே! யான் தமிழ் நாடெங் கணும் சென்று தமிழ் மொழிக்குத் தொண்டு செய்து அதன் வாயிலாக, மக்களின் நல்லறிவை வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் புறப்பட்டவள்; ஆயினும் நினது கனிந்த அன்பு என்னை ஆட்கொண்டு விட்டபடியால் நீ கோரியவாறு சின்னாள் இங்கிருந்து செல்வதென முடிவு செய்துள்ளேன்.

**அதி :** சந்தோஷம்; வாருங்கள் உணவருந்தச் செல்வோம்.

[எல்லோரும் போகின்றனர்]

**காட்சி முடிவு**

## காட்சி 7

**இடம் :** அந்தப்புரம்

**உறுப்பினர் :** அவ்வை, அதிகமான், குயிலினி, பாங்கியர், மந்திரி

[அதிகமானும், அவ்வையும் ஒருபுறம் வீற்றிருக்கின்றனர். குயிலினி மஞ்சத்தின் மீதமர்ந்து பாடிக்கொண்டிருக்கிருள். பாங்கியர் இருபுறமும் நின்று வீசிக்கொண்டிருக்கின்றனர்]

**குயிலினி**—பாடுகிருள்

(புரட்சிக் கவி பாரதிதாசன் இயற்றியது)

இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்
கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு!

தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே—வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம்—இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்

தமிழுண்டு தமிழ்மக்கள் உண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு!—நல்ல
தமிழ்வெல்க வெல்கஎன் றேதினம் பாடு— (இனிமைத்)

[ஒரு தோழி வந்து வணங்குகிருள்]

**தோழி :** அரசே! மந்திரியார் சமுகத்தை அவசரமாகக் காண வேண்டுமாம்.

**அதி :** இங்கேயே வரட்டும்—

*[ தோழி செல்ல, மந்திரி வந்து வணங்கி நிற்கிறார் ]*

—மந்திரி ! என்ன விசேஷம் ?

**மந் :** பிரபோ ! காஞ்சிபுரித் தொண்டைமான் நம்மீது பகை கொண்டு போருக்குச் சித்தமாய் விட்டான்.

*[அதிகமான் முதலியோர் வியப்புறுகின்றனர் ]*

**அதி :** சரி, தொண்டைமானும் போராடத் துணிந்து விட்டானே ? ஏற்கெனவே மலையமான் திருமுடிக்காரி இவ்வாறுதான் நம்மைப் பயமுறுத்தினான் ; அவனது கொட்டத்தை அடக்கினோம். அப்பெரும் போரில் நமது வீரர்களும் படுகாயமுற்றிருக்கின்றனர். ஆயுதங்களும் சேதமடைந்து பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. அதை யறிந்தே தொண்டைமான் துணிந்தனன் போலும். இருக் கட்டும்—கவலைப்பட வேண்டியதில்லை. உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்.

**மந் :** அரசே ! சற்று யோசிக்க வேண்டும். தாங்களோ யாருக்கும் கப்பங்கட்டாத சிற்றரசர் ; தங்கள் புகழ் பரவுவதைச் சகியாமல் மூவேந்தர்களும் கூடத் தங்கள் மீது பொறாமை கொண்டிருக்கின்றனர். இந் நிலையில், தொண்டைமான் போர் புரியும்போது மூவேந்தர்களில் யாராவது ஒருவர் அவன் பக்கம் சேர்ந்து கொண்டால் ஆபத்துக்கிடமாகும். அகையால், கூடியவரை இந்தப் போர் நேராமல் தவிர்ப்பதே நல்லது.

**அவ்வை :** ஆம்—அமைச்சர் கூறியவாறு செய்தலே நல்லது.

**அதி :** தாயே ! எனக்கு யார் மீதும் பகையில்லை. வீணாக என் மீது பகை கொண்டால் நானென்ன செய்வது ?

**அவ்வை :** வேந்தே! யான் தொண்டைமான்பால் தூது சென்று, இப்பெரும் போர் நிகழா வண்ணம் தடுக்கின்றேன்.

**குயி :** [அவ்வையை நோக்கி] அம்மையே! வலுச் சண்டைக்கிழுக்கும் தொண்டைமானுக்கு வலிமையால் புத்தி புகட்டுவதை விடுத்து, தூது சென்று சமாதானம் பேசுவது இழுக்கன்ரோ?

**அதி :** ஆம்—குயிலினி! நன்ருயுரைத்தாய்.

**அவ்வை :** அரசீ! தன் வலியறியாது போராடத் துணிவது தவறன்ரோ?

**குயி :** தாயே! மன்னிக்க வேண்டும். வலுவில் சென்று சமரசம் பேசி வாழ்வதைவிட, வாள் முனையை மகிழ்ச்சியுடன் மார்பில் ஏற்றுக்கொண்டு மானங்காப்பதே சிறந்தது.

**அதி :** [களிப்புடன்] கண்ணே! நீயே வீரப் பெண் மணி—(அவ்வையை நோக்கி) தாயே! தாங்கள் கவலைப்பட வேண்டாம். அரசர்களுக்குச் சண்டையும், சமாதானமும் சகஜம். வலிமைமிக்க அரசன் மற்ருெரு சிற்றரசனை அடக்கி வைக்கவே முயற்சிப்பான். இம்மாதிரி, சும்மாவிருக்கும் ஒருவனை வலுவில் சென்று பயமுறுத்திப் பணிய வைப்ப தற்குப் பெயர்தான் 'திக்கு விஜயம்' என்று சொல்லப் படுகிறது. தாங்கள் அறியாததல்லவே.

**அவ்வை :** [குறுநகையுடன்] வள்ளற்பெரும! நினது வலிமைக்கும் அரசுக்கும் எவ்வித இழுக்கும் ஏற்படாத முறையில், தொண்டைமானுக்கு நல்லறிவு புகட்டி, இச் சண்டையைத் தடுக்கின்றேன்—என் சொல்லை மறுக்காதே.

**அதி :** அப்படியாயின் முயன்று பாருங்கள்.

**குயி :** அம்மையே! தொண்டைமான் சிறு பிள்ளைப் புத்தியுடையவன். தங்கள் பெருமையை அவனறியான்.

**அவ்வை :** [நகைத்து] குயிலினி! "வலிமை யிழந்து மானம் விட்டு மாற்றானுக்குப் பணிந்த மன்னனின் மனைவி" யென உலகோர் உன்னை இழித்துரைக்கும் வண்ணம் அவ்வை ஒருபோதும் செயல் புரியமாட்டாள். "மானங்கெடவரின் வாழாமை முன்னினிதே" என்பதை அவ்வை அறியாதவளா?

**அதி :** மந்திரி! அம்மையார் காஞ்சி செல்லவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்.

**காட்சி முடிவு**

## ஔவையும், தொண்டைமானும்

### காட்சி 8

**இடம் :** தொண்டைமான் இருப்பிடம்

**உறுப்பினர் :** தொண்டைமான், மந்திரி, அவ்வை, காவலன்

[தொண்டைமானும், மந்திரியும் பேசிக் கொண்டிருக்கின்றனர்]

**தொண் :** அமைச்சரே! அதிகமானிடம் அனுப்பிய நமது தூதன் வந்துவிட்டானா?

**மந் :** இன்னும் வரவில்லை அரசே—

**தொண் :** [உலவியவாறு] நாம் சண்டைக்கு வருவதாகத் தூதனுப்பியது தவறென்றே நினைக்கிறேன். அவன் எதிர்பாராத விதமாய்த் திடீரென்று சென்று நாம் அவனது தலைநகரமாகிய தகட்டூரை முற்றுகையிட்டிருந்தால்— எளிதில் வெற்றி பெற்றிருக்கலாம். தூதனுப்பியதால்

அவன் முன்னெச்சரிக்கையாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அவகாசம் ஏற்பட்டுவிட்டது.

**மந் :** அரசே! இது சரியன்று. அரச நீதிப்படி ஓர் அரசனை மற்ருேர் அரசன் வெல்ல வேண்டுமானுல் முன் தூது போக்க வேண்டும்; பின்தான் சண்டைக்கு முற்பட வேண்டும். திடீரென்று தாக்குவதோ, கபடமாக வஞ்சிப்பதோ, தமிழர் வீரத்திற்கு இழுக்கையுண்டாக்கும் செயல்களாகும்.

**தொண் :** அப்படியானுல், மலையமானிடம் சண்டையிட்டு நைந்திருக்கும் இந்தச் சமயத்தில் நாம் அவனுடன் போராட முயல்வது மட்டும் நீதியாகுமா?

**மந் :** முன்னெச்சரிக்கை செய்து விட்டு நாம் போருக்குப் போவது குற்றமாகாது. அவனுக்கு வலிமையில்லையேல் பணிந்து விடட்டுமே. நமக்கடங்கிய சிற்றரசனுக அவனை ஏற்றுக் கொள்வோம்.

**தொண் :** அதிகன் பணிவானென நான் எண்ணவில்லை. அவனே இணையற்ற வீரன். படைபலம் சிதைந்திருக்கும் இந்தச் சமயத்தில்கூட அவனை முறியடிப்பது எளிதான காரியமல்ல. அதுதான் நான் யோசிக்கிறேன்.

**மந் :** அரசே! மூவேந்தர்களும்கூட இப்பொழுது அதிகனிடம் வெறுப்புற்றிருக்கிருர்கள். அவர்களில் ஒருவரை எப்படியாவது நமது பக்கம் சேர்த்துக்கொண்டால், வெற்றி நிச்சயம்.

**தொண் :** [யோசித்து] நீர் சொல்லுவது நல்ல யோசனைதான்......ஆனுல்...ஒரு வல்லரசைத் துணையாகக் கொண்டு இன்னெரு சிற்றரசைத் தொலைத்து விட்டால்—பிறகு, நமக்குதவி செய்த அந்த வல்லரசுக்கு நாம் அடிமையாகும்படி......

**மந் :** ஆம் அரசே—அதுவும் கவனிக்க வேண்டிய விஷயம்தான்.

**தொண் :** அது மட்டுமல்ல—நாம் அதிகனுடன் சண்டை செய்து களைத்திருக்கும் வேளையில், நமக்கு உதவி செய்யவரும் வல்லரசு திடீரென்று அதிகனையும், நம்மையும் ஒருங்கே தாக்கிவிட்டால்?......எந்த வகையில் பார்த்தாலும் துணை கோருவது ஆபத்துக்கிடமாகும். நம்முடைய சக்தியில்தான் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

[காவலன் வந்து வணங்குகிறான்.]

**காவ :** அரசே! அவ்வை மூதாட்டியார் வந்திருக்கிறார்கள்.

[அவ்வை வர, தொண்டைமான் எதிர்கொண்டழைத்து உபசரிக்கிறான்]

**தொண் :** வரவேண்டும் அம்மையே—மந்திரி! இவ்வம்மையாரைப்பற்றி நான் சொல்லாமலேயே அறிந்திருப்பீரென எண்ணுகின்றேன்—இவர்களை நம் நாட்டுக்கொரு திலகம் என்றே கூறவேண்டும்—

**அவ்வை :** வேந்தே புகழுரைகள் வேண்டா; யான் எனது புலமைத் திறங் காட்ட வந்திலேன்; வள்ளலாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் தூதினளாக நின்னைக் காண வந்தேன்.

**தொண் :** அப்படியா! மகிழ்ச்சியே, தாயே! தங்களைப் போன்ற பெண்மணிகள் அரசியலில் அக்கறை கொண்டு, ஒத்துழைக்க முன் வருவார்களாயின், நாடு முன்னேற்றமடையத் தடையென்ன இருக்கிறது?

**அவ்வை :** அரசர் பெரும! அரசியலின் பேரால் நாட்டில் அடாத செயல்களெல்லாம் நடைபெறுகின்றன.

இதனைத் தடுப்பாரிலர். வெளித் தோற்றத்திற்குக் குற்ற மற்றவைகளாகக் காணப்படும் பற்பல செயல்கள், உள்ளூர மக்களுக்கு மாபெருந் துன்பத்தை விளைவிக் கின்றன. இதனையறியாது மாந்தர் தம்முள்ளம் செல்லும் வழியே செல்கின்றனர்—"மன்னவன் கோணில் மக்களுங் கோணுவர்" என்றபடி இறைவனின் ஏவலாளர்களாகிய அரசர்களே இதற்குப் பொறுப்பாளிகளாவர்.

**தொண் :** அம்மையே! தாங்கள் உண்டு களைப் பாறுங்கள். பிறகு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவோம்—வாருங்கள்.

[தொண்டைமான் முன்செல்ல, அவ்வை பின் தொடரு கிருள்.]

**காட்சி முடிவு**

## காட்சி 9

**இடம் :** ஆயுதச்சாலை

**உறுப்பினர் :** தொண்டைமான், அவ்வையார், மந்திரி, வீரர்கள்

[அவ்வையும் தொண்டைமானும் ஒருபுறம் அமர்ந்திருக் கின்றனர். சிலம்பம், மற்போர், வாட்போர் முதலிய விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன]

**தொண் :** அம்மையே! எமது வீரர்களின் திறமை யைப் பார்த்தீர்களா?

**அவ்வை :** மிக்க திறமைசாலிகள். நல்ல பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஆனுல்...உடற்கட்டு அழகுடையதா யில்லை—எங்கள் அதிகனிடமிருக்கும் வீரர்கள்...தோற்றத் திலும் மிக்க அழகுடையவர்கள்.

**தொண் :** அதிகன்பால் தாங்கள் கொண்டுள்ள அன்பின் காரணமாக அவ்வாறு தோற்றலாம்.

**அவ்வை :** அவ்வாறன்று ; உண்மையை உரைத்தேன்.

**தொண் :** இருக்கட்டும் — இதோ பார்த்தீர்களா, எனது படைக் கருவிகளை ; எவ்வளவு பளபளப்பாகவும் கூர்மையாகவும் இருக்கின்றன ! நன்ருய்ப் பாருங்கள் ! எமது வீரர்களின் வலிமையிலும், கூர்மையான ஆயுதங்களிலும், முழுநம்பிக்கை வைத்திருக்கிறேன். இப்பொழுது சொல்லுங்கள் ; அதிகன் எனக்கெதிராகப் போர் புரிய முடியுமா ?

**அவ்வை :** [குறுநகையுடன்] முடியாது, முடியாது —மன்ன !

இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே ; அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ ; என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ணல்எங் கோமான் வைந்நுதி வேலே.

—வேந்தே ! உன்னுடைய இந்தப் படைக் கலங்களெல்லாம் மயில் பீலிகள் அணியப்பட்டும், மாலைகள் சூட்டப்பட்டும், காம்பு திருத்தி நெய் பூசப்பட்டும், தக்க காவலுடன் கோட்டைக்குள் வைத்துக் காப்பாற்றப்படுவதால், மிகுந்த பளபளப்புடையவைகளாயிருக்கின்றன ; உண்மைதான் — வரையாது வழங்கும் வள்ளலாகிய எங்கள் அதிகமானின் போர்க் கருவிகளோ, பளபளப்பின்றி, அடிக்கடி பகைவர்கள் மார்பில் குத்துதலால்

முனைமழுங்கி, விளிம்புகளொடிந்து. கொல்லன் உலைக் களத்திலுள்ள சிறிய கொட்டிலில் கிடக்கின்றன.

**தொண் :** [தலை குனிந்து] அப்படியானால், பளபளப்புடன் காணப்படும் என்னுடைய ஆயுதங்கள் உபயோகப் படுத்தாதவைகள் என்றும், உலைக்களத்தில் பழுது பார்க்கப்பட்டுவரும் அதிகனுடைய ஆயுதங்கள் அடிக்கடி உபயோகத்தில் இருப்பவைகள் என்றும் கூறுகிறீர்களா ?

**அவ்வை :**—ஆம்.

**தொண் :**—தாயே ! தங்களுடைய புலமைத் திறமையால் என்னைப் புகழ்வதுபோல் காட்டி. இகழ்ந்து, அதிகனைப் புகழ்கிறீர்கள். நான் சண்டைசெய்து பழக்கப் படாதவனென்றும், அதிகன் அடிக்கடி போர் முனையில் பகைவரைச் சாடியவன் என்றும் சுட்டிக் காட்டுகின்றீர்கள் ; அல்லவா ?

**அவ்வை :** அதில் ஐயமுண்டோ ? போர்த்திறன் மிக்கவன் ; அஞ்சா நெஞ்சம் படைத்தவன் ; அறநெறி வழுவாதவன் ; ஆயினும், போர்புரிவதை மறத்தன்மையென்று கருதுகின்றான். வேந்தே ! இறைவன் மக்களையெல்லாம் இம்மண்ணுலகில் வாழப் படைத்தானேயன்றி, ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு சாகவன்று. இதனை அதிகன் நன்கறிவான். நீ அதிகனை வலுச் சண்டைக்கிழுக்கிறாய். நெஞ்சுரங்கொண்ட அவன் உனக்கஞ்சிப் பணிந்துவிடப் போவதில்லை. நீ அவனை நாட்டைவிட்டு விரட்டவெண்ணுகிறாய். அவன் தன் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறான். ஆகவே, உங்களிருவரின் தந்நலச் செயலால் ஏற்படும் சண்டையைத் தீர்க்க நீங்கள் இருவரும் தனித்தனியே நின்று போராடிக்கொள்வது ஒருவாறு முறையெனலாம்.

அவ்வாறின்றி உங்கள் நன்மையின் பொருட்டு, ஆயிரக் கணக்கான வாயில்லா மக்களை மாண்டு மடியச் செய்வது நெறியல்லவே. மடிந்து போகும் அம்மக்களுக்கு வாழ்ந்திருக்கும் உங்களுள் ஒருவரால் ஏற்படும் பயனென்ன?

**தொண் :** அம்மையே! நீதியை நிலை நிறுத்த வேண்டியது அரசனது கடமை. அநீதியை ஒழிக்க அரசனேடு குடிகளும் ஒத்துழைக்க வேண்டியதுதானே? மன்னனுக்கு வரும் பெருமையோ அன்றிச் சிறுமையோ, மக்களைச் சேர்ந்ததல்லவா?

**அவ்வை :** நீதியை நிலை நிறுத்துவது எதற்கு?—குடிகளின் நல்வாழ்விற்கன்றே? அவர்தம் இன்பத்திற் கன்றே?—ஆயின், நெறி முறை எதுவென முடிவு கட்டுவது யார்?—இருவரும் உங்கள் நாட்டின் நலங் கருதியும், குடிகளின் நன்மைக்காகவுமே போராடுவதாகச் சொல்லிக் கொள்ளுகின்றீர்கள்—ஆனல், துண்டிக்கப் படுவது குடிகளின் தலைகளேயன்றி உங்கள் தலைக ளல்லவே; துயரக்கடலில் மூழ்குவது குடிகளேயன்றி நீங்களல்லவே!

**தொண் :** தாயே! தொண்டைமானைத் தாங்கள் அவ்வாறு கருதலாகாது. முனைமுகத்தில் வீரர்களுடன் வீரனய் நின்று வெற்றி முழக்கம் செய்து, வாகை சூடுவதே தொண்டைமானின் பரம்பரைக் குணம்; மக்களை மாளச் செய்துவிட்டு, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒளிந்தோடும் பேடியல்ல தொண்டை மான். போர் புரிந்து வீரவாழ்வு நடத்துவதே அவனது இயற்கை.

**அவ்வை :** தொண்டைமான் ஒருவன் வீரவாழ்வு நடத்துவதற்காக அவனது நாட்டு மக்கள் பல்லாயிரம் பேர் தமது இரத்தத்தைச் சிந்த வேண்டுமா?

**தொண் :** அவ்வாறன்று — மக்கள் இரத்தஞ் சிந்துவது தொண்டைமானுக்காகவல்ல; நாட்டின் பெருமைக்காக.

**அவ்வை :** சண்டையிட்டுத்தானு நாட்டின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும்?

**தொண் :** ஆம்; அதில் தடையென்ன? ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் வீரத்தில்தான் இருப்பதாக நான் கருதுகிறேன்.

**அவ்வை :** அதனை யான் மறுக்கவில்லை. வீரம் வேண்டும்—ஆனுல், நீ குறிப்பிடுவது போன்ற வீரமல்ல நாட்டிற்குப் பெருமையளிப்பது. **அன்பு கலந்த வீரம் வேண்டும்;** வீரமும் அன்பும் ஒன்றையொன்று விரவி நிற்கவேண்டும்.

**தொண் :** அம்மையே! தாங்கள் சொல்லுவதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே.

**அவ்வை :** வேந்தே! நீ உனது வலிமையால் ஒருவனை அடக்கி வைத்திருக்கலாம்; அவன் தன் உடலால் உன்னை ஒன்றும் செய்ய முடியாது; ஆனுல், அவன் உள்ளத்தைக் கட்டுப்படுத்தவோ, அடிமைப்படுத்தவோ உன்னுல் முடியுமா?

**தொண் :** அது எங்ஙனம் முடியும் தாயே?

**அவ்வை :** உன்மேல் அன்பில்லாத ஒருவனை நீ எவ்வளவு காலம் அடிமைப்படுத்தி வைத்திருந்தாலும், சமயம் வரும்பொழுது அவன் உன்னை வீழ்த்தத்தானே சூழ்ச்சி செய்வான்?

**தொண் :** ஆம், அது இயற்கைதானே?

**அவ்வை :** ஆதலின், உயிர்களைக் கொல்லுவது வீரமல்ல. அன்பின் வழி உள்ளத்தை அடக்குவதே

வீரம். அதிகாரத்தினால் ஒருவனை அடக்க முடியாது; அன்பினால்தான் அடக்க முடியும். அன்பின் வழி நெறி முறை காப்பதே சிறந்தது. **அன்பின் வழியது உலகம்.** அன்பே சிவம். எங்கள் அதிகமான் தனது மக்களை அன்பி னால் ஆளுகிறான். அவனது கொடைத் தன்மையை இம் மா நிலமெல்லாம் போற்றுகிறது. அவனுடன் நட்புற்றிருந்தால் உனக்குப் பெருமை ஏற்படுவதோடு துணை வலியுமுண் டாகும். உங்கள் இருவரின் நட்பையுமறிந்தால் மூவேந்தர் களுங்கூட உங்கள்மீது படையெடுக்க அஞ்சுவர். இல்லை யேல் உங்களிருவருக்கும் தீமையே பயக்கும்—இதனை எடுத் துக் கூறவே யான் தூதாக வந்தேன். "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி."

**தொண்:** [சற்று யோசித்து] தாயே! தாங்கள் கூறியது முற்றும் உண்மையே. உயிர்க்கொலை செய்து, பல்லாயிரக்கணக்கான மாந்தர்கள் தமது மனைவி மக்கள், உற்றார் உறவினர்களைத் தயங்கவிட்டு மடிந்துபோகும்படி யான இக்கொடும் போர் இனி என்னால் ஏற்படாது. இதைத் தாங்கள் நிச்சயமாக நம்பலாம்.

[அவ்வையும் தொண்டைமானும் அதிகமான் இருப் பிடத்திற்குப் புறப்படுகின்றார்கள்]

**காட்சி மாறுகிறது**

## காட்சி 10

**இடம்:** அதிகமான் இருப்பிடம்

**உறுப்பினர்:** அவ்வை, தொண்டைமான், அதிகமான்

[அதிகமானும், தொண்டைமானும், இருபுறமும் களிப் புடன் நிற்க, அவ்வை நடுவில் நின்று பாடுகிறாள்]

இசைச் செல்வர்

திரு. தி. இலக்குமண பிள்ளை இயற்றியது

**ஔவை :** **பியாகுதி—ஆதி**

பல்லவி

ஒன்றே உயர் சமயம்—உயிர்க்கன்பாம்
ஒன்றே உயர் சமயம்

அநுபல்லவி

ஒன்றே தெய்வம்; அன்பொன்றே அதன் உரு;
நன்றே அதன் செயல்; நாடுக நன்றை— (ஒன்றே)

சரணம்

மன்னுயிர்க் கோயிலுள் வாழும் இறைவனை
வாழ்த்தி வணங்குக நேசச் செயலால்;
நின்னுயிர்க் குற்ற நிதிபிறி தில்லை;
நித்ய நின்மல நேசன் துணைகண்டாய்— (ஒன்றே)

**தொண்:** அம்மையே! இனி என்றும் எங்களுக்குள் பகை நேராது. ஒரு நாட்டை மற்றொரு நாடு அடக்கியாள முயல்வது ஒழுங்கற்றதென்பதைத் தாங்கள் வெள்ளிடைமலைபோல் விளக்கிவிட்டீர்கள். உண்மை யுணர்ந்தேன்.

**அவ்வை:** மன்னர்களே! போரில்லையேல் பொருள் மிச்சமாகும். அப்பொருளை நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கான பல துறைகளிற் செலவிடலாம். போருக்கென்று பொறுக்கப்படும் ஆயிரக்கணக்கான உடற் கட்டுடைய மக்களையெல்லாம் பொது வாழ்வுக்கான செயல்களில் புகுத்தி அவர்களது உழைப்பினைப் பயன்பெறச் செய்யலாம். நாடு எவ்வளவு உயரிய நிலையிலிருக்கும்! இவற்றை நோக்காது மேன்மேலும் பொருளை வாரி வாரி யிறைத்து, புதிய போர்க் கருவிகளையுண்டாக்கி மக்களை மண்ணுக் கிரையாக்குவதில் யாது பயன்?

**தொண்:** ஒன்றுமில்லை—இன்று முதல் நானும் அதிகமானும் தோழர்களானோம்.

**அதிக:** அம்மையே! புலமைத் திறமையால் போரைத் தடுத்தது மன்னியில், வீரனான தொண்டைமானையும் எனக்கு நட்பினனாகச் செய்த தங்களுக்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்!

**அவ்வை:** இந்நட்பு என்றும் மாறாதிருப்பதே நீங்கள் எனக்கியற்றும் கைம்மாறு.

(இருவர் கரங்களையும் ஒன்று சேர்த்து)—

வாழ்க நும் நாடு; வாழ்க நும் மக்கள்; நீடூழி வாழ்க!

[மன்னர்கள் தலைவணங்குகின்றனர்]

**காட்சி முடிவு**

---

# ஔவையும் பேய்களும்

---

## காட்சி 11

**இடம்:** சிற்றூர் வீதி

**உறுப்பினர்:** அவ்வை, வழிப்போக்கர்கள்

[அவ்வை தளர்ந்த நடையுடன் வருகிறாள். மற்றொரு புறமாய் வழிப்போக்கர் இருவர் வருகின்றனர்]

**அவ்வை:** அப்பா! நீங்கள் இவ்வூர் வாசிகள் தானே?

**1-வது வழி:** ஆமா—ஏம்மா கேக்கிறீங்க?

**அவ்வை:** பறம்பு நாடு வெகு தொலையிருக்கிறதோ?

**1-வது வழி:** ஆமாங்க— ரெண்டுகாதம் போகணும்—ஆமா—பறம்பு நாட்டுக்குப் போறிங்களாம்மா?

**அவ்வை:** ஆமப்பா. வள்ளல் பாரியைக் காணச் செல்கிறேன்.

**1-வது வழி:** இந்த ராத்திரி நேரத்திலே போறது ஆபத்துங்க; ஏண்ணு, வழி ரொம்ப கரடு மொரடு; நிலாவும் இல்லே—அப்புறம் ஒங்க இஷ்டம்.

**அவ்வை:** அப்படியானால் இன்றிரவைக் கழிக்கப் படுத்துக் கொள்வதற்குப் பொதுவிடம் ஏதேனும் அண்மையில் இருக்கிறதா?

**1-வது வழி:** இங்கே ஏதம்மா பொது யெடம்? எங்கே யாச்சும் தெருத் திண்ணையிலே படுத்து நல்லாத் தூங்கிப் புட்டு, காலங்காத்தாலே ஏந்திரிச்சு, பொறப்படுங்க.

**2-வது வழி:** ஏண்ணே! இந்த ஊருக்கோடியிலே ஒரு சாவடியிருக்கே, அது பொது யெடந்தானே; ரொம்ப சவுரிய மான எடமாச்சே—

**அவ்வை:** எங்கேயப்பா இருக்கிறது?

**2-வது வழி:** இப்பிடியே நேரே தெக்காலே போனிங் கண்ணு, ஒரு பாழுங்கெணறு இருக்கு. அதைத் தாண்டிப் பீச்சக்கைப் பக்கந் திரும்பினா ஒரு பெரிய ஆலமரம் தெரியும். அதைப் பாத்தாப்படியே நேரா போங்கோ; ஆலமரத்துக்குக் கெழக்காலே நீளமா ஒரு முடுக்குப் போவுது. அதைத்தாண்டி, சோத்துக் கைப்பக்கம் திரும்பினா, சாவடி தான்; எல்லாங் கூப்பிடு தூரத்திலே இருக்குமுங்க—

**அவ்வை:** அங்கேயே போய்ப் படுத்துக்கொள்ளுகிறேன்.

(புறப்படுகிருள்)

**1-வது வழி:** [தடுத்து] அம்மா! அந்தச் சாவடியிலே படுக்கப்படாதுங்க. அதிலே யாருமே படுக்கிறதில்லிங்க.

**அவ்வை:** ஏன்? எதனால் படுப்பதில்லை?

**1-வது வழி:** அதிலே 'பிசாசு' இருக்குதுங்க.

**2-வது வழி:** ஆ! பிசாசா!! (சுற்று முற்றும் பார்க்கிருன்)

**அவ்வை:** [நகைத்து] பிசாசா! நானே ஒரு பிசாசு. என்னைப் பிசாசு என்ன செய்துவிடப் போகிறது?

**2-வது வழி:** [மெதுவாகப் பயத்துடன்] அண்ணே! என்னமோ தெரியலே. பிசாசுதான் கெழவி மாதிரி வந்திருக்குதோ என்னவோ......இருட்டு வேளை...... ஒங்கிட்ட 'இரும்புத் துண்டு' ஏதாச்சும் இருந்தாக் குடண்ணே.

**1-வது வழி:** போடா—காலு கீழே ஊணியிருக்கு பாரு—பிசாசுக்குக் காலு கீழே பாவாதுடா.

**2-வது வழி:** பயமாயிருக்கண்ணே...

**1-வது வழி:** [அவ்வையை நோக்கி] அப்பறம் கேட்டிங்களாம்மா—நான் வந்து—ஒரு நாளு எம் பொஞ்சாதிக்கிட்டக் கோவிச்சிக்கிட்டு அந்தச் சாவடியிலே போயிப் படுத்துக் கெடந்தேன். நான் எப்பவுமே கொஞ்சம் பயந்தவன் பாருங்க—அதனுலே வெளக்கை வேறே கொளுத்தி வச்சிருந்தேன்......

**2-வது வழி:** [சுற்று முற்றும் பயத்துடன் பார்க்கிருன்]

**1-வது வழி:** ராத்திரி நடுச் சாமத்திலே யாரோ வெளக்கை அணைச்சமாதிரி யிருந்தது—

**2-வது வழி:** [பயத்துடன்] ஆ! அப்புறம்!

**1-வது வழி:** கண்ணை முழிச்சிப் பார்த்தா—மானத்துக்கும் பூமிக்குமாக ஒரு ஆளு கன்னங்கறேலின்னு நிக்கிற மாதிரி இருந்துச்சு—

**2-வது வழி:** [நடு நடுங்கி] ஐயோ......

**1-வது வழி :** முனீசுவரனை மனசிலே நெனைச்சிக்கிட்டு, அலறியடிச்சு ஓடியாந்து ஊட்டுக்கு வந்து கதவைத் தட்டினேன். நான் போட்ட சத்தத்தைப் பாத்து எம் பொஞ்சாதி பிசாசுதான் கதவைத் தட்டுதுண்ணு நெனைச்சுக்கிட்டுக் கதவைத் தெறக்கவேயில்லை. ராத்திரி முழுக்கக் கொட்டுக் கொட்டுண்ணு தெருத் திண்ணை யிலேயே முழுச்சிக்கிட்டிருந்து காத்தாலே உள்ளாற படுத்தவன்தான்—மூணு நாளாக் காச்சல் விடவே யில்லிங்க—அங்கே போகாதிங்கம்மா. வேறே எங்கணுச்சும் போங்க.

**2-வது வழி :** [நடுக்கத்துடன்] போண்ணே. பாவம் கெழவியை ரொம்பப் பயமுறுத்திட்டியே. (அவ்வையை நோக்கி) பயந்துட்டிங்களாம்மா ?

**அவ்வை :** [நகைத்து] ஆமாப்பா—நான்தான் பயந்து விட்டேன். உன் கால் கைகளெல்லாம் ஏனப்பா இப்படி நடுங்குகின்றன ?

**2-வது வழி :** அது கொஞ்சம் நடுக்குவாதம்......

**அவ்வை :** அப்பா ! பயமென்பது இவ்வுடலைப் பற்றியது. எப்படிப் பார்த்தாலும் இவ்வுடல் புழுக்கள், நோய்கள் இவற்றிற்கு உறைவிடம். அறிவுள்ளோர் இதையறிந்திருப்பார்கள். அவர்கள் உயிரையும் உடலையும், 'தாமரையிலை நீர் போல' ஒட்டில்லாமல்தான் வைத்திருப் பார்கள்—

“ ஆவாரை யாரே அழிப்ப ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் ?”—

வாழ்வாரை அழிப்பதும், சாவாரைத் தடுத்து நிறுத்து வதும் நம் செயலன்று ; சாவு தலைக்குமேல் இருக்கிறது. அச்சம் ஏன் ? சாவுக்கு அஞ்சுபவன் ஒவ்வொருதரமும் செத்துச் செத்துப் பிழைக்கிறான். கவலையின்றிப்

பற்றற்றிருப்பவன் ஒரே சாவைத்தான் அடைகிருன்—

“ ‘சிவாயநம’ வென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாய மொருநாளு மில்லை ”—

(பயந்தவனை நோக்கி) ஏனப்பா! நீ இன்னும் எவ்வளவு காலம் இந்த மண்ணில் இருப்பாய்?

**2-வது வழி:** எம் பொஞ்சாதி மனசு வச்சு நல்லா சமைச்சுப் போட்டாண்ணு, கிட்டதட்ட ஒரு............ நூறு வயசு வரைக்கும் இருப்பேண்ணுதான் நெனைக் கிறேன்.

**அவ்வை:** நூருண்டுகள் இருப்பாயா?—சரி, அதற்கு மேல்?

**2-வது வழி:** அதுக்குமேலே சாவுறேனே, பொழைக் கிறேனே, யார் கண்டா?

**அவ்வை:** என்றைக்கிருந்தாலும் ஒரு நாள் இந்த மரம் பட்டுத்தானே தீர வேண்டும்; வீணே பயந்து சாவதேன்?

(போகிருள்)

**காட்சி முடிவு**

## காட்சி 12

**இடம்:** ஊர்ச்சாவடி

**உறுப்பினர்:** அவ்வை, பேய்கள், ஏலங்குழலி, அரச குமாரன்

(அவ்வை படுத்துறங்குகிருள்...பெண் பேயொன்று எற்றெற்று என்று பெருங் கூச்சலிட்டுக்கொண்டு வந்து அவ்வையின் முன் நிற்கிறது—அவ்வை கண் விழித்துப் பார்த்து)

**அவ்வை :** ஏ, ஆவேசமே! என்னையா அச்சுறுத்துகின்றாய்? நீ என்ன சொல்லினும் எது செய்யினும் யானஞ்சேன். தெள்ளிய வெண்பாக்களை இரண்டு தரம் படித்தும் மனத்தில் பதியாதவனையும், பனை ஓலையைக் கையில் பிடித்து எழுதத் தெரியாதவனையும், பெற்றாளே ஒரு பெண்பாவி—அவளிடம் போய் இம்மூடனைப் பிறர் நகைக்கும்படியாகப் பெற்றாயே என்று சொல்லிப் பயமுறுத்து போ.

வெண்பா

" வெண்பா இருகாலில் கல்லானை, வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளென்
றெற்றோமற் றெற்றோமற் றெற்று."

**பேய் :** ஆஹா! இவ்வம்மை சாதாரணமானவரன்று; இவராலேயே நமக்கு விமோசனம் ஏற்பட வேண்டும்.

(பேயுருவம் மறைய இராஜகுமாரி ஏலங்குழலி சுய ரூபத்துடன் அவ்வையை வணங்கி)

தாயே! நீங்களே தெய்வம். என்னைக் காப்பாற்றி எனக்கு விடுதலையளிக்க வேண்டும்.

**அவ்வை :** அம்மா! நீயேன் இந்நிலைக்காளானாய்? உனது வரலாற்றைத் தெரிவி.

**ஏலங் :** தாயே! நான் இவ்வூர் அரசனின் புதல்வி. ஒரு நாள் நான் என் தோழிகளுடன் உப்பரிகையில் பந்து விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது, வழிப்போக்கனுக உப்பரிகையின் கீழ் வந்து தங்கிய ஓர் இராஜகுமாரரைக் கண்டு காதல் கொண்டு, இந்தச் சாவடியில் வந்து இரவில் என்னைச் சந்திக்க வேண்டுமென்று ஓர் ஓலை யெழுதி உப்பரிகையிலிருந்தபடியே அவர்மேல் விட்டெறிந்தேன். அவர் அதை யெடுத்துச் சென்றுவிட்டார்—குறித்தபடி

இராஜகுமாரர் காத்திருப்பாரென்று நடு இரவில் நான் சாவடிக்கு வந்தேன்—உள்ளிருந்தபடியே ஒருவர் என்னை அழைத்தார். நான் இராஜகுமாரரென்றெண்ணிப் போய் ஆவலுடன் அணைத்துக் கொண்டேன். உடனே ஒரே நாற்றமும், அழுகிய உடல் போன்ற உணர்ச்சியு மேற்பட்டு அவனை வெளியே இழுத்து வந்து பார்க்க, குஷ்டரோகியெனத் தெரிந்தது. எழுத்து வாசனையறியாத இராஜகுமாரர் நான் எழுதிய ஓலையைக் குஷ்டரோகியிடம் படித்துக் காட்டச் சொல்ல, குஷ்டரோகி இராஜ குமாரரைப் பயமுறுத்தி ஓட்டிவிட்டு, தானே இராஜ குமாரர்போல் சூது செய்தானென்று அறிந்து கொண்டேன். அதனால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதால் இப்பேயுருவடைந்தேன். தாயே! எனக்கு அருள் புரிய வேண்டும்.

**அவ்வை:** அட மூடப் பெண்ணே! கல்வியறிவில்லாத வனையா நீ இச்சித்தாய்! சரி, வருந்தாதே. இப்பொழுது நீ வேண்டுவதென்ன?

**ஏலங்:** நான் மீண்டும் மானிட வடிவுகொண்டு காதலித்த கணவனையடையக் கருணை புரிய வேண்டும் தாயே.

**அவ்வை:** அங்ஙனமே யாகுக. நீ உறையூரில் அரசன் மகளுக்கு ஆலாத்தியெடுக்கும் பெண்களின் தலைவியாகிய மரகத வடிவு என்பவளுக்குப் பெண்ணாய்ப் பிறந்து, தமிழறியும் பெருமாள் என்னும் பெயர் பெற்று விளங்கி, விரும்பிய கணவனையே மணந்து இன்பம் துய்ப்பாயாக.

[ஏலங்குழலி மறைய, மற்றொருபுறம் ஆண் பேய் தோற்றுகிறது]

—ஏ, பேயே! நீ யார்?

**பேய் :** நான்தான் அந்த இராஜகுமாரன்.

[பேயுரு மறைய இராஜகுமாரன் வணங்குகிருன்]

**அவ்வை :** உனக்கென்ன வேண்டும்?

**இராஜ :** தாயே! இளமையில் கல்வியில் மனம் வையாது கண்டபடி திரிந்ததால், என் தந்தை உலக ஞானமாவது அடைந்தால்தான் இராஜ்யம் தருவேனென்று என்னே விரட்டிவிட்டார். நான் தேசாந்திரியாக இவ்வழி வர, இராஜகுமாரியைக் கண்டேன். அவள் எறிந்த ஓலேயைக் குஷ்டரோகியிடம் காட்டிப் படிக்கச் சொல்ல, அவன்—நான் ஏதோ குற்றம் செய்திருப்ப தாகவும் பொழுது விடியுமுன் இவ்விடத்தை விட்டுப் போகாவிட்டால் உயிருக்கே அபாயமென்றும் கூற, பயந்து ஓடிவிட்டேன். பின்னுல் நடந்த உண்மையறிந்து நானும் இங்கு வந்து தற்கொலே செய்து கொண்டேன்—அம்மா! என் மூடத்தனத்தைப் போக்கி எனக்கும் அருள் புரிய வேண்டும்.

**அவ்வை :** அப்பா! கல்வியறிவு இல்லாமையா லன்ருே உனக்கு இந்நிலே ஏற்பட்டது; "கைப்பொருள் தன்னின் மெய்ப் பொருள் கல்வி"யேயன்ருே?—எத்துணே அழகும் செல்வமும் இருந்து என்ன பயன்? "குஞ்சியழகும் கொடுந்தானேக் கோட்டழகும், மஞ்சள் அழகும், அழகல்ல"—கல்வியழகே அழகு. அதுவே கொடுக்கக் கொடுக்கக் குறைவு படாத அழிவற்ற செல்வம். மனிதனுக்குக் கண் எவ்வளவு இன்றியமை யாததோ, அதே போன்று கல்வியும் இன்றியமையாதது.

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"**

—கல்வி பயிலுவதற்கு ஏற்ற பருவம் இளமையே. இளமையில் கற்கும் கல்வியே பசுமரத்தாணி போன்று உள்ளத்தில் நன்கு பதியும். அறம் பொருள் இன்பமும்

வீடும் பயப்பது கல்வியே. இதனை மறவாதே—நீயும் அதே உறையூரில் ஒரு விறகு தலையனாகப் பிறந்து, அந்த மங்கையையே மணந்து இன்புற்று வாழ்வாயாக.

[இராஜகுமாரன் வணங்கி விட்டு மறைகிறான். அவ்வை மீண்டும் படுத்துறங்குகிறாள்]

காட்சி முடிவு

## ஔவையும் பாரியும்

### காட்சி 13

**இடம்:** நந்தவனம்

**உறுப்பினர்:** அவ்வை, பாரி, கபிலர், அங்கவை, சங்கவை பாங்கியர்

[அங்கவை, சங்கவை இருவரும் தம் பாங்கியருடன் கோலாட்டம் ஆடுகின்றனர். பரிசில்கள் அடங்கிய பையுடன் அவ்வை பின்னே வர, பாரியும் கபிலரும் வருகின்றனர். பெண்களெல்லோரும் வணங்குகிறார்கள்]

**பாரி:** அங்கவை! இதோ பார் இம்மூதாட்டியை! இவர்தான் அவ்வைப் பிராட்டியார்—

[அங்கவை, சங்கவை இருவரும் அவ்வையை வணங்குதல்]

**அவ்வை:** நீடூழி வாழக்கடவீர்கள்.

**பாரி:** அம்மையே! இவர்களிருவரும்தான் நான் பெற்ற அருஞ் செல்வங்கள். பெயர் அங்கவை, சங்கவை; எனது மனையாளிறந்து பல ஆண்டுகளாகின்றன. தாயற்ற இச்செல்விகளையே என்னுயிர் போல் கருதி வளர்த்து வருகிறேன்.

**அவ்வை :** அப்படியா !—வள்ளலே! இப்பெண்களுக்கு ஏன் இன்னும் மணமுடிக்காமலிருக்கிருய்?

**பாரி :** அம்மையே! மூவேந்தர்களும் எனது பெண்களை விரும்பிக் கேட்கிருர்கள். நானென்ன செய்வது? இருப்பதோ இரண்டு பெண்கள்; ஒருவருக்குக் கொடுத்தால் மற்றெருவருக்குக் கோபம் வரும். ஆகவே, மூவேந்தர்களுக்கும் இல்லையென்று சொல்லிவிட்டேன். அதனுல் என் மீது மூவருக்குமே வருத்தந்தான்.

**அவ்வை :** வள்ளலே! தகுதியுடைய உன் போன்ற குறுநில மன்னரைப் பார்ப்பதே நலமென எண்ணு கிறேன்.

**பாரி :** நானும் அப்படித்தான் தீர்மானித்திருக்கிறேன். அம்மையே! கபிலர் பெருமான் பெண்களுக்கு நன்கு கல்வி புகட்டி வைத்திருக்கிருர்.

**கபிலர் :** அம்மையே! பெண்களுக்கு என்னுலியன்ற வரை இன்னிசை அமுதையும் ஊட்டியிருக்கிறேன். அவர்களுடைய பாடல்களைத் தாங்கள் கேட்டு இன்புற வேண்டும்.

**அவ்வை :** எங்கே, பாடச் சொல்லுங்கள்.

**கபிலர் :** குழந்தைகளே! அம்மையார் இசை வல்லுநராவர்—இசையுடன் இசைந்து நன்ருய்ப் பாட வேண்டும்.

[மகளிரிருவரும் தலைவணங்கிப் பாடுகிருர்கள்]

**அங்கவை, சங்கவை :**

கு. சா. கிருஷ்ணமூர்த்தி இயற்றியது

**இராகம் : செஞ்சுருட்டி** **தாளம் : ஆதி**

பல்லவி

பெருமை கொள்வாய் தமிழா! தமிழ் நாட்டில்
பிறந்ததனுல் மிகச் சிறந்தவன் நானென்று— (பெ)

அநுபல்லவி

அருமை மிகும் தமிழ் அமுத மொழியுனதே
ஆதலினு லிந்தப் பூதல மீது நீ— (பெ)

சரணம்

சிற்பக்கலைகளிலே சிறந்ததுன்னுடு
சித்திரக்கலைத் திறம் செழித்ததுன்னுடு
கற்பனைக் காவியம் கவிதைகளெனும் உயர்
கலையின் நலங்களெல்லாம் கண்டதுன்னுடு-- (பெ)

ஆற்றுநீர் வளங்கள் அமைந்ததுன்னுடு
அமுதக் கனிச்சோலைகள் நிறைந்ததுன்னுடு
மாற்றுயர் பொன் நவமணி விளையும் நாடு
மலைவளம் பயிர்வளம் மலிந்ததுன்னுடு-- (பெ)

முப்பெரும் தமிழ் மன்னர் இப்புவியெல்லாம்
முறைதவறுதரசு செலுத்துவதுன்னுடு
ஒப்பரும் புலவர்கள் உதித்ததுன்னுடு
ஓதவொண்ணுதுன் தமிழ் நாட்டுக்கு ஈடு-- (பெ)

**அவ்வை :** ஆஹா ! மிக மிக இனிமையாயிருக்கின்றது. இசையின்பம் நன்கு அமைந்துள்ளது. இவ்வாறு பொருள் செறிந்த பாடல்களையே பாடவேண்டும். பொருளற்ற பாடலையோ, வழுவுற்ற பாடலையோ, புரியாத பாடலையோ பாடுவதைவிடச் சொற்களின்றி வெறும் இசையையே பாடிக்கொண்டிருக்கலாமே.

**வெண்பா**

"இழுக்குடைய பாட்டிற்(கு) இசைநன்று சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி."

**கபிலர்** : ஆம்—ஆம்—உண்மையே.

**பாரி** : அம்மையே! தாங்கள் சில நாட்கள் என் மகளிருடன் இங்குத் தங்கி இசைத் தமிழின் சிறப்பினையும், இல்லறத்தின் மாண்பினையும் எடுத்துரைக்க வேண்டுகிறேன்.

**அவ்வை** : பாரியே, நினது கொடைத் தன்மையையும், அன்பு நிறைந்த உள்ளத்தையும் யாவரும் புகழக் கேட்டே யான் உன்னைக் காண வந்தேன்—யான் வந்தது பாடல் பாடிப் பரிசில் பெற மட்டுமன்று—

**பாரி** : தங்கள் விருப்பத்தைத் தடையின்றித் தெரிவிக்கலாம்.

**அவ்வை** : நீ புலவர்கட்கு வரையாது வழங்குதல் மட்டும் போதாது. உனது நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் புலவராக்க முற்பட வேண்டும். புலவர்களின் பாடல்களைக் கேட்டு நீ இன்புறுவதைப் போல உனது மக்களெல்லோரும் இன்புறச் செய்தல் வேண்டும். "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்." இதுவே எனது வேண்டுகோள்.

**பாரி** : தாயே! தங்கள் கட்டளையைச் சிரமேற் கொண்டேன். உலகெலாம் தமிழ் மணம் கமழச் செய்வேன். இதனை உறுதியாய் நம்பலாம்—எனது வேண்டுகோளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே.

**அவ்வை** : வள்ளலே! என்னை மன்னிப்பாய். நான் ஊரூராய்ச் சென்று தமிழன்னைக்குத் தொண்டு செய்யத் துணிந்து புறப்பட்டவள்; ஆதலின், ஓரிடத்தில் தங்குதலியலாது. மற்றொரு சமயம் வருகிறேன்.

**பாரி :** அம்மையே! இன்றிரவேனும் இங்குத் தங்கிச் செல்லலாகாதா? இனி என்று தங்கள் பாடல்களைக் கேட்டு இன்புறுவேன்?

**அவ்வை :** பாரி வள்ளலே! உனது விருப்பத்தை நிறைவேற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். உனதன்பை என்றும் மறவேன்—விடையளிப்பாய்.

**பாரி :** [கவலையுடன்] சென்று வாருங்கள்—

**அவ்வை :** கபிலரே! வணக்கம்—குழந்தைகளே! போய் வரட்டுமா?

[எல்லோரும் வணங்க, அவ்வை செல்கிறாள்]

காட்சி முடிவு

## காட்சி 14

**இடம் :** காடு

**உறுப்பினர் :** அவ்வை, கள்வர்கள்

[அவ்வை தோளில் மூட்டையுடன் விரைவாக நடந்து வருகிறாள். மறைந்திருந்த இருவர் திடீரென்று கையில் தடியுடன் அவ்வையை வழி மறிக்கின்றனர்]

**2-வது :** ஏ கெழவி! இந்தா பாரு—மருவாதியா ஓங்கிட்ட இருக்கிறதை யெல்லாம் கீழே வச்சுடு—

**1-வது :** என்ன பாக்கிறே? ராசாகிட்ட வாங்கினதையெல்லாம் ஒழுங்காகக் குடுத்தேண்ணு பொழைச்சே .........இல்லே.........(தடியைக் காட்டுகிறான்) இது எத்தனை பேர் தலை மண்டையை ருசி பாத்திருக்குது தெரியுமா?

**அவ்வை :** ஏனப்பா! ஒரு கிழவியை அடித்துப் பிடுங்குவதற்கு இரண்டு வீரர்களா? கோழியடிக்கக் குறுந்தடி வேண்டுமா?

**1-வது :** நான் ஒருத்தனே போதும்—தம்பி சும்மா பொழுது போக்காகக் கூட வந்திருக்கான்.

**அவ்வை :** தம்பிமார்களே ! ஏனிந்த ஈனத் தொழிலைச் செய்து வயிறு வளர்க்கிறீர்கள். ‘புலையும் கொலையும் களவும் தவிர்க்க வேண்டியவைகளல்லவா ? பழுதற்ற ஒரு தொழிலைச் செய்து உயிர் வாழ முடியாதா ?

**2-வது :** ஏ கெழவி ! எந்தத் தொழிலைச் செய்யறதா யிருந்தாலும் மொதல் வேண்டியிருக்குதே ; அதனுலே தான் மொதலில்லாத வியாபாரமாப் பாத்தோம்.

**1-வது :** இருக்கறதுக்குள்ளாற இதுதான் யோக்கிய மான தொழிலு. மத்ததெல்லாம் மொள்ளமாரித்தனம் பண்றது.

**அவ்வை :** அப்பா ! இந்தத் தொழிலில் உங்கள் உயிரையே முதலாக வைக்கிறீர்கள். நான் கிழவி— என்னுல் ஒன்றும் செய்ய முடியாது போகலாம். உங்களைப் போன்ற முரடனுயிருந்தால் உங்கள்பாடு என்னுகும் ?

**1-வது :** முரடன் கிட்டப் போறதுக்கு எங்களுக் கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு ? ஆளைப் பாத்துத்தானே நாங்களும் போவோம். ஊம்—கழட்டு சிக்கிரம்.

**அவ்வை :** [தனக்குள்] ஊம்—ஐம்பெருங் குற்றங் களில் ஒன்ருகிய இக்களவு மாபெரும் வள்ளலாகிய பாரியின் நாட்டிலுமா இருக்கிறது ? (கள்வரை நோக்கி) ஏனப்பா ! ‘கொள்ளை விரும்பேல்’ என்பதை நீங்கள் படித்தது இல்லையா ? இதுதானு உங்கள் தொழில் ?

**1-வது:** மூணு தலைமுறையா இதேதான் தொழிலு. ஆளைப் பாத்தாத் தெரியலே? மொகத்திலே வீரக்களை துள்ளுமே.

**அவ்வை:** பரம்பரைத் திருடர்களாகத் தெரியவில்லை அப்பா—பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல்தான் தோற்று கிறது.

**2-வது:** ஏ கெழவி! நீதானே ஆத்திசூடியிலே 'களவும் கத்து மற'ண்ணு எழுதி வச்சிருக்கே; அதுதான் இப்பக் களவைக் கத்துக்கிறோம்—இன்னும் கொஞ்சம் பொருள் கெடைச்சதும் மறந்துடுவோம்.

**அவ்வை:** அடடா! இப்படியா தவருகப் பொருள் கண்டு பிடிக்கிறீர்கள்? 'களவும் கத்தும் அற' என்றால் திருட்டையும் பொய்யையும் ஒழி என்றல்லவா பொருள் கொள்ள வேண்டும். 'கத்து' என்றால் பொய்யென்பது பொருள்.

**1-வது:** அது என்ன எழவு பொருளோ தெரியாது. மொதல்லே உம் பொருளை எடு சொல்றேன்.

**அவ்வை:** இந்தப் பொருட்களை நீங்கள் கவர்ந்து செல்வது பற்றி எனக்குக் கவலையில்லை; கொடையாளியாகிய பாரியின் நாட்டிலும் இத்தீச் செயல் நடைபெறுகிறதே யென்றுதான் வருந்துகிறேன்.

**2-வது:** தீச் செயலாவது, நெருப்புச் செயலாவது? ஊம்—நாழியாவுது எடு—

> [அவ்வை மூட்டையிலிருந்த பொருட்களைக் கொடுத்து விடுகிறாள்]

**1-வது:** உன்னெ உசிரோட விட்டிருக்கோமே; இதிலே ருந்தே நாங்க எம்பிட்டு யோக்கியங்கண்ணு பாத்துக்கோ. வேணும்ணு மவராசா கிட்டப் போயிக் கேட்டுப்பாரு.

அவ்வை: [தனக்குள்] ஆம், உண்மையே — இச் செய்தியை வள்ளல் பாரியிடம் அறிவித்து விட்டுத்தான் செல்லவேண்டும்.

[விரைந்து போகிறாள்]

## காட்சி 15

**இடம்:** பாரியின் அரண்மனை

**உறுப்பினர்:** பாரி, கபிலர், அவ்வை, கள்வர்

[கபிலரும் பாரியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்]

**பாரி:** வீரர்கள் வந்து நெடு நேரமாகியும் மூதாட்டியாரைக் காணவில்லையே! ஒருக்கால், பொருள் போனால் போகட்டுமென்று போயிருப்பாரோ?

**கபி:** அப்படி ஒருக்காலும் நேராது. களவு நடந்ததைக் கூறவேனும் கட்டாயம் வந்தே தீருவார்—(உள்நோக்கி) அதோ—

[அவ்வை விரைந்து வருகிறாள்]

**பாரி:** [குறுநகையுடன்] அம்மையே! வரவேண்டும். ஏன் உடனே திரும்பி விட்டீர்கள்? முகத்தில் மிகுந்த சோர்வு காணப்படுகிறதே!

**அவ்வை:** வேந்தே! அறமும் பொறையும் நிறைந்த நின்நாட்டிலுமா இத்தீச் செயல்கள் நடைபெறுகின்றன? ஏழைகளே நினது பறம்பு நாட்டில் இல்லையென எல்லோரும் புகழ்கின்றார்களே! அப்படியிருக்க, களவுத் தொழில் செய்து வயிறு வளர்க்கும் வறுமையாளர் கூட்டமும் இங்கிருக்கின்றதென்பதை நேரில் காணும்படி நேரிட்டதே!!

**பாரி:** தாயே, பதறவேண்டாம்—என்ன நடந்தது?

**அவ்வை:** நீ எனக்களித்த பொருட்களையெல்லாம் நின் நாட்டெல்லையைத் தாண்டு முன்னரே, கள்வர்கள் கவர்ந்து சென்று விட்டனர்.

**பாரி:** [சினங்கொள்வது போல் நடித்து] ஆஹா! அப்படியா செய்தார்கள்! இப்பொழுதே அவர்களை இங்குக் கொண்டுவரச் செய்கிறேன்.

**கபி:** இதோ நானே சென்று கைப்பிடியாய்க் கொண்டு வருகிறேன்.

[கபிலர் உள்ளே செல்ல, அவ்வை வியப்புடன் நிற்கிருள். கபிலர், கள்வர் போல் நடித்த காவலர்களிருவரையும் அழைத்துக்கொண்டு வருகிருர்—அவ்வை விவரமறியாது வியப்புறுகிருர்]

**பாரி:** தாயே! இவர்கள்தாஞ அக்கள்வர்கள்?

**அவ்வை:** ஆம், இவர்களே! ஐயமில்லை— வள்ளலே! இவர்களை நீ எங்ஙனம் கண்டுபிடித்தாய்? நினது செயல் தாங்கொணு வியப்பைத் தருகின்றதே.

**பாரி:** மன்னிக்க வேண்டும் தாயே. இவர்களைக் கள்வர்களாக்கியவன் யானே. எனது கட்டளைப்படியே களவு நடந்தது.

**அவ்வை:** என்ன! நீயா!!

**பாரி:** ஆம் தாயே.

**அவ்வை:** முன் வாயிலில் கொடுத்து, பின்வாயிலில் பிடுங்கிக் கொள்வதுதான் நினது வள்ளற்றன்மையோ?

**பாரி:** அம்மையே! தங்கள் மீதுள்ள அன்பினுல் நான் திருடனுனேன். எப்படியாவது இன்றிரவு தங்களை இங்குத் தங்கச் செய்யவே இந்தச் சூழ்ச்சி செய்தேன்— தாங்கள் நினைப்பதுபோல் எனது நாட்டில் களவு, கொலை முதலிய

தீச்செயல்கள் கிடையா. அவற்றிற்கு மூலகாரணமாயுள்ள வறுமையை இயன்றவரை போக்கியுள்ளேன். தங்கள் பிரிவைத் தாங்கொணுது யான் அன்பினுல் களவு செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்.

**அவ்வை:** [ஆனந்தக் கண்ணீர் சொரிந்து] வள்ளலே! நினது அன்பினை என்னென்று புகழ்வேன்!—நீ என்பால் வைத்துள்ள அன்பின் நிமித்தமாக இச்செயலைச் செய்திருப்பினும், இது தவருன செயலே. விளையாட்டிற்காகவேனும் தவருன செயல்புரிய முற்படாதிருத்தலே நலம்—(கள்வரை நோக்கி) மிக்க திறமையாளர்கள்—கள்வர்கள் போன்றே நடித்தனர்.

**பாரி:** அம்மையே! இதோ நான் கொடுத்த பரிசில் களையெல்லாம் பெற்றுக் கொள்ளுங்கள்—இன்றிரவு மட்டும் என் மகளிருடன் தங்கி நாளைக் காலை பயணப்படவேண்டு கிறேன்.

**அவ்வை:** பாரி! எனக்கு இப்பரிசில்கள் வேண்டா. தனிமையில் கால்நடையாகவே ஊர் சுற்றிக்கொண் டிருக்கும் என்னிடத்தில் இவ்வளவு விலையுயர்ந்த பொருட்கள் இருப்பது கூடாது. பெண் கல்வி வளர்ச்சிக் காக இப்பொருட்களையெல்லாம் உனது நாட்டிலேயே செலவழித்துவிடு. எனக்கு வேண்டியது ஒரு வேளைக் கூழ்; அது எங்கும் கிடைக்கும். அதை முன்னிட்டு யான் பொருள் சேர்க்க வேண்டியதே யில்லை—இதை முதலிலேயே உன்னிடமிருந்து பெற்றுச் சென்றது தவறென இப்பொழுதுதான் உணருகிறேன்; அதே தவற்றினை மீண்டும் செய்ய மாட்டேன்.

**பாரி:** தங்கள் விருப்பம்போல் செய்யுங்கள்.

**காட்சி முடிவு**

## ஔவையும் காரியும்

### காட்சி 16

**இடம் :** வயல் வெளி

**உறுப்பினர் :** உழவன் முனிசாமி, அவ்வை, பேச்சி யாத்தாள், வள்ளல் காரி

[முனிசாமி மனைவியுடன் பேசிக்கொண்டே கஞ்சி குடித்துக் கொண்டிருக்க. ஒரு புறமாய் அவ்வை வருகிருள்]

**அவ்வை :** [உழவனை நோக்கி] ஏனப்பா! இவைக ளெல்லாம் வள்ளல் காரியின் நிலங்கள் தானே?

**முனி :** [கஞ்சி குடித்துக்கொண்டே] ஆமாம்மா—

**அவ்வை :** அவரது இருப்பிடம் எங்கேயிருக் கிறது?

**முனி :** [குடித்துக்கொண்டே] பக்கத்திலே தான்—

**அவ்வை :** பதருமல் மெள்ளக் குடித்துவிட்டு மறுமொழி சொல்லப்பா—புரை யேறிவிடப் போகிறது.

**முனி :** எம்பசி எனக்குத் தெரியும்—[குடிக்கிருன்]

**பேச்சி :** ஏம்மா! எசமானரைப் பார்க்கணுமுங்களா?

**அவ்வை :** ஆமாம் தாயீ—

**பேச்சி :** அவங்களை ஒங்களுக்குத் தெரியுங்களா?

**அவ்வை :** வள்ளல் அதிகமானுடைய அவையில் ஒரு முறை கண்டதுண்டு.

**பேச்சி :** அரண்மனைக்குப் போறதுண்ணு ரெண்டு கல்லு போவணுமிங்க; இன்னும் சித்த நாழியிலே வயலைச் சுத்திப்பார்க்க எசமானரே இங்கே வருவாங்க—நெதக்கும்

வர்ற வழக்கந்தான்—(உற்று நோக்கி) ஓ! எசமானர் தான்—அதோ வந்துட்டாங்களே. (கணவனை நோக்கி) இந்தாங்க—ஒரு ஒதுப்புறமாக் குந்திகிட்டுக் குடியுங்க—அப்புறம் எசமானரு கோவிச்சிக்கப் போறாங்க.

[முனியனும் பேச்சியும் காரி வரும் திக்கு நோக்கி வணங்கிவிட்டுச் செல்ல, காரி வருகிறான்]

**அவ்வை :** [வணங்கி] வள்ளலே வருக!

**காரி :** [வியப்புடன் வணங்கி] யார்! அவ்வைப் பிராட்டியாரா! அம்மையே வரவேண்டும். தமது திருவடி இம்மண்ணில்பட நான் என்ன புண்ணியம் செய்தேனோ!

**அவ்வை :** காரி வள்ளலே! நின்னைக் கண்டதும் பெருமகிழ்வுற்றேன். நல்லாரைக் காண்பதுவும் நன்றன்றோ?

**காரி :** ஆம் தாயே—தங்களைப் போன்ற நல்லிசைப் புலமை நல்லாரைக் காண்பதுவும், அவர் சொற்கேட்பதுவும், அவர்தம் குணங்கள் உரைப்பதுவும், அவரோடிணங்கி இருப்பதுவும் நன்றே—இது தங்கள் பொன்னுரைதானே!

**அவ்வை :** வள்ளலே! புலவரைப் புகழுவான் வேண்டித் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் நினது பெருந்தகைமை போற்றற்குரியதே.

**காரி :** அம்மையே! அதிகமானுடைய சபையில் தங்களைக் கண்டது முதல், தனிமையில் சந்தித்துத் தங்கள் அரிய மொழிகளைக் கேட்க ஆவல் கொண்டிருந்தேன். இன்றுதான் அப்பெரும் பேறு கிடைத்தது.

**அவ்வை :** காரி வள்ளலே! யான் தண்டமிழ்ப் பாண்டி நாடு செல்கிறேன். இடையே நின்னைக் கண்டு சில மொழிகள் புகலவெண்ணி இங்குற்றேன்.

**காரி :** தாயே! அங்ஙனமாயின் எளியேனுடைய இல்லத்தில் தங்கி இளைப்பாறும் நோக்கம் தங்களுக்கு இல்லையெனத் தோன்றுகிறது—இருக்கட்டும்; தாங்கள் என்னிடம் சொல்ல விரும்புவதென்ன?

**அவ்வை :** வள்ளலே! நினது ஆளுகைக்கு உட்பட்ட இவ்விடங்களிலெல்லாம் பயிர்த் தொழிலின் சிறப்பினைப் பற்றி மக்களிடையே நன்கு பறையறைய வேண்டும். நெற்பயிர் விளைப்பதே பற்பல பணியிலும் பயனுடைத்தென்பதை அவர்தம் உள்ளத்தில் வேரூன்றச் செய்தல் வேண்டும். பூமி திருத்தி உண்பதே பொன்னன வாழ்க்கை என்பதை மக்கள் உணரச் செய்தல் வேண்டும். வறண்ட நிலங்களிலெல்லாம் நீரூற்றெடுத்து வளம் பெறச் செய்து, மேழிச் செல்வத்தை வளர்க்கவேண்டும். இதுவே நீ என்பால் கொண்டுள்ள அன்புக்கு அணி செய்வதாகும்.

**காரி :** தாயே! தங்கள் பொன் மொழிகளாகிய விதைகளை என் உள்ளமென்னும் நிலத்தில் விதைத்து விட்டேன். இனி அது வேரூன்றித் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிதருமென்பதில் ஐயம் வேண்டாம். வாருங்கள்—அடியேனுடைய இல்லத்திற்கு வந்து இன்று தங்கி என்னால் கொடுக்கப்படும் சிறிய பொருட்களைப் பெற்றுச் செல்ல வேண்டுகிறேன்.

**அவ்வை :** இல்லை வள்ளலே! யான் பிறிதொரு சமயம் வந்து பரிசில்களைப் பெற்றுச் செல்கிறேன். கருணை வள்ளலாகிய நின்னைக் கண்டதே போதும். பாண்டி நாடு செல்லவெண்ணிப் புறப்பட்டு விட்டேன். அப் பயணம் தடைப்படுவது கூடாது.

**காரி :** அம்மையே! ஒரு நாள் இங்குத் தங்கி என் உள்ளத்தை மகிழ்விக்கலாகாதா?

**அவ்வை :** வள்ளலே! தமிழ்ப் பணி செய்வதிலும் சிறந்த தவமில்லை. உன்னுள்ளத்தை மகிழ்விக்கும் பொருட்டு யானிங்குத் தங்குவேனாயின், என்னுள்ளத்திற்கு இன்னல் விளைத்தவளாவேன்—ஆதலின், என்னைத் தடை செய்யாதே.

**காரி :** [சற்று யோசித்து] சரி, நான் செய்த புண்ணியம் அவ்வளவுதான்— (திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டவன் போல்) தாயே! இதோ இக்களைக் கட்டினை வைத்திருங்கள். விரைவில் வந்து விடுகிறேன்.

[களைக்கட்டினைக் கொடுத்து விட்டு விரைந்து போகிறான். அவ்வை 'களைக்கட்டினை' வைத்தபடி சிந்தனையிலிருக்கிறாள். முனியனும், பேச்சியாத்தாளும் வருகின்றனர்]

**பேச்சி :** நீங்க இந்த வேலையைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிற வரைக்கும் உருப்படப்போறதில்லை.

**முனி :** பின்னெ என்ன வேலையிடி செய்யச் சொல்றே?

**பேச்சி :** அஞ்சுகாசானாலும் அரமனை உத்யோவமாப் பாருங்க; பொழுதண்ணைக்கும் ஒடம்பு முறிய வேலை சேஞ்சு என்ன சொவத்தைக் கண்டிங்க?

**முனி :** போடி—அரமணை உத்தியோவமாவது, கால் மணை உத்தியோவமாவது?—(அவ்வையிடம் வந்து) அம்மா! நீங்க சொல்லுங்க!

**அவ்வை :** என்னப்பா?

**முனி :** நாயமா சொல்லணும்—என்னமோ சின்னப் புள்ளையிலிருந்தே இந்த வேலையிலே பழகிட்டேன்; கயிட்டமோ, நட்டமோ, கடேசி வரைக்கும் இதிலேயே காலத்தைத் தள்ளிப்புடலாமிண்ணு இருக்கேன்; இவ

சொல்ரு...இந்த வேலே வேணும், அரமனையிலே ஏதாச்சும் உத்தியோவம் பாருண்ணு—அங்கே போனு அது எப்படியிருக்குமோ? இக்கரைக்கு அக்கரை பச்சை யாத்தானேயிருக்கும்—ஆருகண்டா? நீங்க சொல்லுங் கம்மா. இவளுக்கு வெயில்லே நிண்ணு நிண்ணு மூளேயே உருவிப் போச்சம்மா.

**பேச்சி:** [வெறுப்புடன்] பின்னே என்னுங்கம்மா! இந்த வெவசாயத்தாலே இருந்த நெலபலமெல்லாம் போயி நவை நட்டையெல்லாம் வித்து வரிக்குக் குடுத்துட்டு ஓட்டாண்டியா இந்தக் காரி எசமான் கிட்ட வந்து சேந்தோம்—இந்தத் தரும ராசன், மகாப்பிரபு, ஒனக்கு என்ன வேலே வேணும்னு கேட்டா......இந்தப் பாவி மனுசன் திருப்பியும் இந்த வேலேயையாம்மா கேப்பாரு?

**அவ்வை:** இவர் யாரம்மா?

**பேச்சி:** இவருங்களா?—இவருதானுங்க எங்க ஊட்டுக்காரு......

**முனி:** ஆமா, அவங்க அத்தை மவன்—சின்னப் புள்ளேயிலேருந்தே கருவேப்பிலேக் கண்ணே வளக்கிற மாதிரி எங்க ரெண்டு பேரையும் வளத்தாங்க.

**அவ்வை:** ஓகோ! முறைப் பெண்ணு?

**முனி:** ஆமா—மொதல்லே குடுக்க மாட்டேண் ணுங்க; சிறை எடுத்துக்கிட்டுப் போயிடுவேண்ணு சொன் னேன்—பயந்து போயி குடுத்துட்டாங்க—

**பேச்சி:** அது கெடக்குது—கேளுங்கம்மா நாயத்தை. அரமனையிலே ஒரு சேகுவன் வேலே இல்லாமலாம்மா போச்சு?

**முனி:** [அவள் முதுகில் தட்டி.] பேசுற அழகைப் பாருங்க! சேகுவனும்......சேவுகனிண்ணு சொல்லுடீ.

**அவ்வை :** அடிக்காதேயப்பா—

**முனி :** [சிரித்து] அடிக்கலிங்கம்மா...............சும்மா அப்பிடி வெளையாண்டேன்.

**பேச்சி :** பொழுதண்ணைக்கும் இப்பிடித்தாம்மா வெளையாட்டு வெளையாட்டுண்ணு போட்டுச் சாத்தறது.

**அவ்வை** பெண்ணைப் போற்றி வளர்க்க வேண்டுமப்பா. அடிப்பது கூடாது.

**முனி :** ‘அடியாத மாடு படியாது’ங்கம்மா.

**அவ்வை :** ஏனப்பா மாடும் மனிதர்களும் ஒன்ரு? மாடு பணியாதென்றே வைத்துக் கொள்வோம்—மனிதர்களும் பணியமாட்டார்களா?

**முனி :** நான் இவளை மனிச செம்மத்திலேயே சேக்கலிங்க......

**பேச்சி :** ஆமாம்மா, இவுருதான் மனுசரு, நான் மாடு— எங்க ரெண்டு பேருக்கும்தான் கண்ணுலம் ஆயிருக்கு—

**முனி :** [கோபத்துடன் பார்க்கிருன்]

**அவ்வை :** [பேச்சியை நோக்கி] ஏனம்மா! உழவுத் தொழில் கெட்ட வேலையா?

**வெண்பா**

“ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் வீழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேருேர் பணிக்கு”

—அம்மா! உயிருக்கு இன்றியமையாது வேண்டியது உணவு; இதை உண்டாக்கும் தொழில் இழிவானதா? பெருநிதி படைத்தோராயினும், பொருளை வாரி வாரித்

தின்ன முடியுமா? நீயனுப்பும் நெல்மணிகளாலன்றோ எல்லோரும் உயிர் வாழுகின்றனர்.

**முனி:** [களிப்புடன் குதித்து] ஆ! அப்பிடிச் சொல்லுங்கம்மா. (மனைவியை நோக்கி) கேட்டியாடி அம்மா சொன்னதை? அல்லாத்துக்கும் மேலே நாந் தாண்டி ராசா!

**அவ்வை:** ஒருமுறை சரியான விளைச்சல் இல்லை யென்றால் அதன் உண்மையைக் கண்டுபிடித்து மறுமுறை அத் தவற்றைப் போக்க வேண்டும். ஊக்கம் குன்றக் கூடாது—"உழ அற உழுதால்தான் விளைவற விளையும்." "ஆழ உழுதாலும் அடுக்க உழ வேண்டும்"—"மண லுழுது வாழ்ந்தவனுமில்லை, மண்ணுழுது கெட்டவனுமில்லை"—அல்லாமலும், நன்றாக எருப் போடவேண்டும். சிலர் காலா காலத்தில் களையெடுப்பதில்லை—"களையெடாதவன் விளை வெடான்"

—பூச்சி, புழு முதலிய தொத்து நோய்கள் பயிர்களைப் பீடித்தால், மன்னன் ஏற்படுத்தியுள்ள 'உழவு மன்றத்தில்' கூறி அந்நோயைப் போக்கும் முறையை அறிந்து உடனே அதை அடியோடு போக்க வேண்டும்—இவ்வாறு 'பருவத்தில் பயிர் செய்'து நிலத்தைக் காத்து, செய்வன வற்றைத் திருந்தச் செய்து வந்தால் ஒருநாளும் குறைவேற் படாது. கடவுட் செயலால் மழையின்றிப் பயிர்கள் பாழடைந்தால், மன்னனிடம் முறையிட்டுக் குறைதீர வழிகோலவேண்டும். உழவு, நெசவு இந்த இரண்டுந்தான் மனித உயிருக்கே அடிப்படையான தொழில்கள்—உடையில்லாமலாவது வாழலாம்......உணவில்லாமல் வாழ முடியுமா?

**முனி:** அது எப்பிடிம்மா முடியும்? நானே ஒரு நாளைக்கு நாலுவேளை சாப்பிடுவேனே சோறு இருந்தா.

**அவ்வை :**

வெண்பா

" ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது "

—உழவுக்கு மிஞ்சின தொழிலே இல்லை. 'சீரைத் தேடின் ஏரைத் தேடு.'

**முனி :** அப்படிச் சொல்லுங்கம்மா !

**பேச்சி :** ஏன் ; அரமணையிலே வேறே வேலை பாத்தா என்னவாம் ?

**அவ்வை :** ஏனம்மா ! அடிமை வாழ்வையா விரும்புகிறாய்? "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்பதை நீ உணரவில்லையா ? அரண்மனையில் வேலை செய்தால் ஒரு குறிப்பிட்ட தொகைதான் கிடைக்கும். உழவில் உங்கள் உழைப்புக்குத் தக்கவாறு ஊதியம் கிடைக்குமே. அரண்மனை வேலையில் குற்றங் குறைகள் காணப்பட்டால் போகச் சொல்லிவிடுவார்கள். பின் பிழைப்புக்கே திண்டாட்டமாய்விடும். உழவு தன்மதிப்புடைய தொழில். உன் எண்ணம்போல் நீ நினைத்ததைச் செய்யலாமே. அரண்மனை வேலையில் பொய், புரட்டு, பித்தலாட்டம் எல்லாம் இருந்தால்தானம்மா காலந்தள்ள முடியும். உழவில் பிறருக்குத் தீமை பயக்கும் செயல்கள் ஒன்றுமே இல்லை. நன்றாய் உணர்ந்து பாரம்மா.

**முனி :** [மனைவியிடம்] அடியே, கிராமந்தாண்டி பட்டணத்துக்கெல்லாம் உயிர் குடுக்கிற ஊத்து— (அவ்வையிடம்) அம்மா ! அவ கெடக்கிறாம்மா—என்ன

ஆனாலும் சரி—நான் இதிலே ஒரு கை பாக்கத்தாம் போறேன்.

**பேச்சி :** நல்லாப் பாருங்க—ஒடம்பிலே ரத்தமிருக்கிற வரைக்கும்.

[காரி வருகிறான்]

**காரி :** அம்மையே! மன்னிக்க வேண்டும். பொழுது சாய்ந்துவிட்டது. இனி வழி நடப்பது கூடாது. இன்றிரவு என்னில்லத்தில் தங்கிச் செல்ல வேண்டுகிறேன்.

**அவ்வை :** ஓ! இதன் பொருட்டுத்தான் இக்களைக் கட்டினைக் கொடுத்துச் சென்றனையோ?

**காரி :** தாயே! நான் செய்தது பிழையாயின், அது தங்கள்பால் கொண்ட அன்பின் காரணமாகச் செய்ததே யாகும்.

**அவ்வை :** வள்ளலே! நினது பேரன்பை என்னென்பேன்! உன் விரும்பம்போல் இன்று தங்கிச் செல்கிறேன்.

**காரி :** ஆஹா! மகா பாக்கியம்—வாருங்கள்.

[முன்னே செல்கிறான்]

**அவ்வை :** [உழவரை நோக்கி] முனிசாமி! பேச்சி யாத்தா! போய் வரட்டுமா?

**பேச்சி :** போயிட்டு வாங்கம்மா.

**முனி :** அடிக்கடி வயப்பக்கம் வந்துட்டுப் போங்கம்மா (வணங்கி) கும்பிடுடீ அம்மாவை......

[இருவரும் வணங்குகின்றனர்]

**அவ்வை :** ஆற்று மணலினும் அதிக நாள் வாழ்வீர்கள்.

[அவ்வை செல்லுகிறார்]

**காட்சி முடிவு**

# ஔவையும் பாண்டியனும்

## காட்சி 17

**இடம் :** பொற்கிழி மண்டபம்.

**உறுப்பினர் :** பாண்டியன், அவ்வை, புலவர்கள்

[நான்கு பொற்சங்கிலிகளால் கட்டப்பட்ட ஒரு பலகையின் மீது பொற்கிழி வைக்கப்பட்டிருக்கிறது—காவலன் ஒருபுறம் நிற்கிறான். பாண்டியனும் அவ்வையும் வருகின்றனர்]

**பாண்** [அவ்வையை நோக்கி] அம்மையே! இதைப் பார்த்தீர்களா! இந்நான்கு பொற்சங்கிலிகளும் அறுந்து விழப் பாடும் புலவர்களுக்கு இதிலிருக்கும் பொற்கிழியைக் கொடுப்பதென்று முடிவு செய்து கட்டி வைத்திருக்கிறேன். இதுவரை எவரும் முன்வரவில்லை. யாது காரணம் பற்றியோ இங்குள்ள புலவர்களும் முயற்சி செய்யவில்லை.

**அவ்வை :** அப்படியாயின், சங்கப் புலவர்களை யழைத்து நேரில் கேட்டுப் பார்க்கிறதுதானே?

**பாண் :** எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆயினும் தங்கள் முன்னிலையில் அழைத்துக் கேட்டுப் பார்க்கலாம். (காவலனை நோக்கி) அடே! புலவர்களை அழைத்து வா—

**காவ :** உத்தரவு—

[உட்செல்லுகிறான்—புலவர்கள் வருகின்றனர்]

**பாண் :** புலவர்களே! இன்றே என் போட்டியின் இறுதி நாள். உங்களுள் ஒருவர் இச்சங்கிலியறப் பாடி, தமிழின் மேன்மையையும், மதுரையின் பெருமையையும் காப்பாற்றுவதுடன், எவ்விதக் குறைபாடுமில்லாத கவிதைக்கு உயிருண்டாகி, அக்கவிதைப்படி நடக்கு

மென்று நான் கொண்டுள்ள எண்ணத்தையும். உறுதிப் படுத்த வேண்டும்.

**தலைவர் :** அறிவிற் சிறந்த அம்மையே! தாங்களே இதைச் செய்ய வேண்டும்.

**அவ்வை ;** உங்கள் விருப்பமதுவாயின். அங்ஙனமே யாகட்டும்.

## வெண்பா

1\. "ஆர்த்தசபை நூற்றொருவர் ; ஆயிரத்தொன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத் தொருவர்,—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின், உண்டென் றறு."

[**பொருள் :** சபையோர் போற்றத்தக்க யோக்யதை யுடையவன் நூற்றில் ஒருவனும், உண்மைப் புலவன் ஆயிரத்தில் ஒருவனும், பிறரைத் தன் வயப்படுத்தும் பேச்சாளி பதினாயிரத்தில் ஒருவனும், கொடை வள்ளல் கோடிக்கு ஒருவனும் உண்டென்பது உண்மையாயின் அதை உறுதிப்படுத்துவதற்கு அறிகுறியாக அறுந்து விழு]

[ஒரு சங்கிலி அற்று விழுகின்றது—புலவர்கள் "ஆஹா" வென்று பாராட்டுகின்றனர்]

2\. "தண்டாமல் ஈவது தாளாண்மை ; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை—அடுத்தடுத்துப்
பின் சென்றால் ஈவது காற்கூலி பின் சென்றும்
ஈயானைச் சம்போ லறு."

[**பொருள் :** ஒருவன் கேட்குமுன் அவனது குறிப் பறிந்து கொடுப்பதே தலை சிறந்த கொடை. கேட்டபின் கொடுப்பது நடுத்தரமான கொடை. அடிக்கடி பின்பற்றி வந்து தொந்தரவு செய்தபின் கொடுப்பது நடைகூலி

போன்றது. அப்படிப் பின்பற்றிச் சென்றும் கொடுக்காதவன் சந்ததி அற்றுப் போவது போல், அற்று விழு]

[மற்ெறாரு சங்கிலி அற்று விழுகின்றது]

3. "உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலிதான் வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமறு மென்றுரை லறு."

[பொருள்: ஊராரறிய நியாயமென்று தெரிந்த வழக்கை லஞ்சம் வாங்கிக்கொண்டு தள்ளிவிடும் நீதிபதியும், அவன் சுற்றத்தாரும் சந்ததி அற்றுப் போவது உண்மையாயின், நீயும் அற்று விழு]

[மூன்றுவது சங்கிலி அறுந்து விழுகிறது]

4. "வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்றால் அறு."

[பொருள்: வலிமையுடையவனோடு சேர்ந்து கொண்டு, உண்மையான வழக்கைப் பொய் வழக்காக்கி விடும் கொடியவன், வழக்கை இழந்தவனும் அவனுடைய சுற்றத்தாரும் அழுத கண்ணீரால் சந்ததியற்றுப் போவது உண்மையாயின் நீயும் அற்று விழுவாய்]

[நான்காவது சங்கிலியும் அற்று விழுகிறது]

**எல்லோ:** ஆஹா! என்ன புல்மைத்திறம்!!

**அவ்வை:** [பொற்கிழியை எடுத்து] வேந்தே! இப்பொற்கிழி புலவர் குழுவினர் அனைவருக்கும் உரியது. ஆதலின், இதனை யாவருக்கும் பகிர்ந்து கொடுத்துவிட வேண்டுகிறேன்.

**பாண்டி :** தாயே! தங்கள் கையாலேயே கொடுத்து விடுங்கள்.

[அவ்வை பொற்கிழியைத் தலைவரிடம் கொடுக்க, தலைவர் வணக்கத்துடன் வாங்கிக் கொள்கிறார்]

**காட்சி முடிவு**

# ஔவையும் சோழனும்

## காட்சி 18

**இடம் :** ராஜவீதி

**உறுப்பினர் :** அவ்வை, சோழன், எழினி, குழந்தை, நகரமாந்தர்

[மக்கள் ஆண்களும், பெண்களும், அரசன் பவனி வருவதைக் காணப் போய்க் கொண்டிருக்கின்றனர். எழினியின் இளஞ் சிறுவன் அழுகிறான்; எழினி அவனை அடித்துக் கொண்டிருக்கிறாள்; அவ்வழி வந்த அவ்வை குழந்தையை எடுத்து மார்புடன் அணைத்துக் கொள்கிறாள்]

**அவ்வை :** ஏனம்மா, குழந்தையை அடிக்கிறாய்?

**எழினி :** கொழந்தையா இது! கொரங்கில்ல......

**அவ்வை :** அம்மா! இளங் குழந்தைகளை அடிப்பதோ வருத்துவதோ கூடாதம்மா. குழந்தைகள் கடவுட் தன்மை வாய்ந்தவர்கள். விருப்பு வெறுப்பற்ற கடவுளுக்கும் குழந்தைக்கும் மாற்றமேது? "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்பதன் பொருள் என்ன? அன்பு ஒன்றுதான் குழந்தைக்குத் தெரியுமென்பதல்லவா? அப்படியிருக்க, அன்புடன் போற்றி வளர்க்க வேண்டிய குழந்தையை இப்படி யடிக்கலாமா?

**எழினி :** பின்னெ என்னம்மா, சொன்னுக் கேக்காமே அடம் புடிக்குது......மகாராசா கோவிலுக்குப் போருரே, வேடிக்கை பாக்கலாமிண்ணு புள்ளையைத் தூக்கிட்டு வந்தா பேசாமேயிருக்கவேணும்?-பட்டு வேணுமிண்ணு கேக்கிருன். ......அதிலேயும் மகாராசா மேலே போட்டிருக்கிற பட்டுத் தான் வேணுமாம். எப்படியிருக்கு?—கோபம் வருமா வராதா? அதான் பட்டு பட்டுண்ணு ரெண்டு வச்சேன்...... பாருங்கோ, அழுவுறதைப் பாருங்க, உடுங்க சொல்றேன் —அடுப்பிலே முறிச்சு வச்சுப்புடறேன்.

**அவ்வை :** ஐயோ! உலகத்தில் மக்கட் பேறடைவதற்காக எத்தனை பேர். அரச மரம் சுற்றுகிருர்கள்; காசி, ராமேச்சுரம், போகிருர்கள்!! இந்தக் குழந்தை உன் வயிற்றில் வந்து பிறந்திருக்கிறதே யம்மா—மக்கள் மெய் தீண்டுவதே உடலுக்கின்பந் தரத்தக்கதல்லவா? அவர்கள் குதலைவாயின் மதலை மொழிகளைவிட செவிக்கின்பந்தருவது வேறுண்டோ?

**எழினி :** சரிதான்—புள்ளை கேக்கறதையெல்லாம் வாங்கிக் குடுக்கிறதுண்ணு, குபேரனலேகூட முடியாதம்மா.

**அவ்வை :** அம்மா! இப்பொருள் கிடைக்கும், இப் பொருள் கிடைக்காதென்பது குழந்தைக்குத் தெரியுமா? ஏதோ அறியாமையால் கேட்கிறது—அதற்கு அன்புடன் மறுமொழி சொல்ல வேண்டுமேயொழிய அடிப்பது கூடாது—(குழந்தையை நோக்கி) கண்ணா! உனக்கென்னடா வேண்டும்?

**குழந்தை :** பட்டு வேணும்......

**அவ்வை :** எந்தப் பட்டடா வேணும்?

**குழந்தை :** [அழுதுகொண்டே] மவாராசா மேலே போட்டிருக்கிற பட்டு வேணும்......

**அவ்வை :** அழாதேடா தங்கம்—நான் வாங்கித் தருகிறேன்.

[“சோழ மன்னர் நீடூழி வாழ்க” என்று கூவிக் கொண்டு கட்டியக்காரர்கள் முன் செல்ல, இரு மருங்கிலும் மெய்காப்பாளர் புடைசூழ, சோழன் பெருநற் கிள்ளி பல்லக்கில் வருகிறான்—அவ்வை பல்லக்கின் முன் சென்று வணங்க, சோழன் பல்லக்கை நிறுத்தச் செய்கிறான்]

**அவ்வை :** சோழ மன்னனே! சற்றுப் பொறுக்க வேண்டும். உம்முடைய மகிழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளாமல் ஓர் இளங்குழந்தை அழுகிறதைப் பாரும். அதன் உள்ளத்தை மகிழ்விக்க வேண்டியது உமது கடமையல்லவா?—அக்குழந்தை வேண்டுவது ஓர் அற்பமான பொருள், உம் மீதிட்டிருக்கும் பட்டாடைதான், இதோ இதனை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

[“கவி” யொன்று பொறித்து மன்னனிடம் கொடுக்கிறாள்]

### வெண்பா

“ நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வேல் அகளங்கா!
என்றுங் கிழியா(து) என் பாட்டு.”

**சோழன் :** [கண்களில் ஒற்றிக்கொண்டு] ஆம்—ஆம். உண்மையே. ஐயமில்லை. அம்மையே! இதோ பெற்றுக் கொண்டு போய்க்கொடும்.

[தன்மேல் போட்டிருந்த பட்டாடையை அவ்வையிடம் கொடுக்கிறான்—கூடியிருந்த நகர மாந்தரும் ஏனையோரும் வியப்புறுகின்றனர்]

—அம்மையே! தாங்கள் யாரென்பதை அறிய ஆவல் கொண்டுள்ளேன்.

**அவ்வை :** என் பெயர் அவ்வை; இறைவனருளால் சிறிது பாடுந்திறன் பெற்றுள்ளேன்.

**சோழன் :** ஆ! (களிப்புடன்) அவ்வை மூதாட்டியா!! தாயே! தங்களைக் காணப்பெற்றது அடியேன் செய்த பாக்கியம். தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?

**அவ்வை :**

**வெண்பா**

"கால்நொந்தேன் நொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூரம் எளிதன்று—கூனன்
கருந்தேனுக் கண்ணுந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக் கெங்கே யிடம்."

**சோழன் :** அப்படியா? வாருங்கள் இந்தப் பல்லக்கிலேயே அரண்மனைக்குச் செல்லலாம்.

**அவ்வை :** வேண்டாம். யான் தமிழகம் முழுதும் நடந்து பழக்கப்பட்டவள்தான். நீர் பல்லக்கில் செல்லும். நான் பின்னால் நடந்து வந்து அரண்மனையில் பார்க்கிறேன்.

**சோழன் :** தாயே! தாங்கள் மிகுந்த களைப்புடன் காணப்படுகிறீர்கள். பல்லக்கில் வாருங்கள்.

**அவ்வை :** இல்லை, இல்லை...வேண்டாம். நடந்தே வருகிறேன்.

**சோழன் :** கட்டாயம் வரவேண்டும்—

[அவ்வையை வணங்கிவிட்டுப் பல்லக்கில் ஏறிச் செல்கிறான். அவ்வை பட்டாடையைக் குழந்தையின் மேல் போர்த்தி]

**அவ்வை :** இப்பொழுது மகிழ்ச்சிதானடா கண்ணு?

**குழந்தை :** [ஆனந்தத்துடன்] மகிழ்ச்சிதான்......

**எழினி :** [அவ்வையை வணங்கி] அம்மா! உங்ககிட்ட என்ன சக்தியிருக்குதோ தெரியலே—நீங்க மனுஷிதானா? பயமாயிருக்கம்மா.

**அவ்வை ;** [நகைத்து] ஏனம்மா?—நானும் உன்னைப் போல ஒரு பெண்தான்.

**எழினி :** ஒருத்தராலேயும் முடியாத இந்தக் காரியத்தை முடிச்சுப்புட்டீங்களேம்மா. மகாராசா உங்ககிட்ட எவ்வளவு பணிவாகப் பேசுனாரு!...என்ன சக்தியோ!!...

**அவ்வை :** ஒரு சக்தியுமில்லையம்மா. கல்வியின் திறன். நீயும் இதைச் செய்யலாம். கோழைத்தனம், கல்வியின்மை, இரண்டும்தான் உன் போன்றோரைத் தடுத்து நிறுத்துகிறது.

**எழினி :** புள்ளையை உங்க வாயாலே வாழ்த்துங்கம்மா......(குழந்தையிடம்) டே கண்ணு! பாட்டியைக் கும்பிடுடா.

**குழந்தை :** பாட்டி! கும்பிடுறேன்......

**அவ்வை :** **பாரதி பாட்டல்**

தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா,
பொய் சொல்லக்கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா...

[குழந்தையை எடுத்து முத்தமிடுகிறார்]

**எழிலி :** போயிட்டு வாறேண்ணு சொல்லுடா.

**குழந்தை :** பாட்டி! போயிட்டு வரட்டுமா?

**அவ்வை :** போயிட்டு வாடா கண்ணு.

**எழினி :** அம்மா ! போயிட்டு வாறேம்மா......... (குழந்தையை இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு) நீங்க நல்லாருக்கணும்மா...குழந்தைக்குப் பட்டு வாங்கிக் குடுத்தீங்களே......நல்லாருக்கணும்......

[போகிருள்]

**காட்சி முடிவு**

## காட்சி 19

**இடம் :** சோழன் அரண்மனையில் ஒருபுறம்,

**உறுப்பினர் :** புலவர்கள். அவ்வை

[புலவர்கள் சிந்தனையிலாழ்ந்திருக்கின்றனர்]

**முதலா :** புலவீர் ! எமதறிவுக்கு யாதொன்றும் எட்ட வில்லை. நுமதறிவுக்கேனும் பட்டதோ ?

**இரண்டா :** நான் மாத்திரமென்ன ?.........நானும் மனிதன்தானே !...இதென்ன சர்தாரணமான காரியமா ?— இன்றிரவுக்குள் செய்யுட்களியற்றி, நாளை உதயத்தில் மகாராஜா முன்னிலையில் அரங்கேற்ற வேண்டும்......... நாலு கோடிக் கவிதைகள் ! (பெருமூச்சு விட்டு) அடே யப்பா......

**மூன்ரு :** நான் நினைக்கிறேன்: இதில் ஏதோ சூதிருக்கிற தென்று. நாம் மிகவும் இறுமாப்புற்றிருக்கிருேம், நம் செருக்கை யடக்க வேண்டும் எனவெண்ணியே அரசர் இவ்வாறு கட்டளையிட்டிருக்க வேண்டும்—அப்பப்பா...... ஒன்ரு, பத்தா, ஆயிரமா, இலட்சமா ? கோடி ! அதுவும் நாலு கோடி !! இன்றிரவுக்குள் !!

**நாலா :** நீர் சொன்னதே உண்மை. நம்மை அவமானப் படுத்தவே அரசர் இவ்வாறு கூறியிருக்கிருர். ஓரிரவுக்குள்

நாலு கோடிச் செய்யுட்களியற்ற எந்தப் புலவரால்தான் முடியும்? நாளை மகாராஜா கேட்கும் பொழுது 'முடியாது' என்று சொல்லித் தலைகுனிவதைவிட இரவோடிரவாக எங்கேயாவது ஓடிப் போய் விட்டாலென்ன?

**முதலா :** ஆ! அதுவே சாலச் சிறந்தது.

**மூன்ரு :** நான் வேண்டுமாயின் இரவுக்குள் ஒரு இலட்சம் செய்யுட்கள் எழுதுவேன். ஏனைய செய்யுட்களை இயற்றுவது யார்?

**இரண் :** என்னையா! பைத்தியம் மாதிரி உளறு கிறீரே......

[அவ்வையார் வருகிருர்]

**முதலா :** அம்மையீர்! நீவீர் யாவரோ? இவண் வந்துற்ற காரணம் என்னையோ? யாமறிய இயம்புவீர்.

**அவ்வை :** நீவீர் புலவீரோ?

**முதலா :** ஆம்—புலவர் சிகாமணிகள்.

**அவ்வை :** ஓ! புலவர் சிகாமணிகளோ?—யான் அரண்மனையில் விருந்தினளாக வந்து தங்கியுள்ளேன்— புலவீர்! உங்கள் அனைவருடைய முகங்களும் கவலையைத் தோற்றுவிக்கும் காரணத்தை இக்கிழவி அறியலாமோ?

**முதலா :** அம்மையே! யாமனைவரும் சோழ மன்னரின் அவைக்களப் புலவர்கள்; மன்னனின் மாண்புமிக்க கட்டளை ஒன்றுளது. அஃது யாதெனில், இன்றிராவிடியு முன்னர் நான்கு கோடிச் செய்யுட்கள் பாடி மன்னர் முன் அவையில் அரங்கேற்ற வேண்டுமென்பது. அது பற்றியே யாமனைவரும் கற்பனைக் கடலுள் ஆழ்ந்து, கவிதைக் கரையினை நாடி நீந்திக்கொண்டிருக்கிருேம்.

**அவ்வை :** இன்னும் கரை காண இயலவில்லையோ?

**இரண்டா :** கரையிருக்குமிடமும் தெரியவில்லை. கைகளும் களைத்துவிட்டன. தத்தளிக்கிறோம்.

**முதலா :** மூழ்கிச் சாவதையன்றி யாதொரு வழியுங் கண்டிலோம்.

**அவ்வை :** சாவதா?—ஏன்? நீவீர் யாவரும் புலவர்கள் தானே?

**இரண்டா :** அதிலொன்றும் ஐயமில்லை.

**அவ்வை :** அப்படியாயின் எழுதிக் கொண்டு போய்க் கொடுப்பதுதானே?

**நாலா :** நிரம்ப சரி, வணக்கம்; போய் வாருங்கள். உங்களோடு பேச, இப்பொழுது எங்களுக்குச் சக்தி இல்லை.

**அவ்வை :** ஏன்?

**மூன்ரு :** ஏனு!.........நாலு கோடிச் செய்யுட்கள் என்று சொன்னேமே, காதில் விழுந்ததா? (உரக்க) நாலு கோடி......

**அவ்வை :** [நகைத்து] இதற்காக நீங்கள் இரைந்து உயிரை விடவேண்டாம். நன்ருய்க் காதில் விழுகிறது. நாலு கோடிதானே?

**இரண் :** ஆம். நாலு கோடி......

**அவ்வை :** புலவர்களாகிய நீங்கள் நாலு கோடி எழுதத் தயங்குவானேன்?

**இரண் :** [பெருமூச்சு விட்டு] தாயே! அநந்தகோடி வந்தனம். நீங்களோ கிழவி—இதைப்பற்றி உங்களுக்கு ஒன்றுமே புரியாதுபோலிருக்கிறது—இனிப் புரிய வைப்பதும் கஷ்டம். ஏதோ கேட்டீர்களேயென்று சொன்னேம்.

தயவுசெய்து வந்த வழியே போய் வரவேண்டும் அம்மையே—

**அவ்வை :** புலவர்களே! நான் கிழவியாயிருப்பதனுலேயே ஒன்றுந் தெரியாதவளாய் விடுவேனு?—அறிவுத் திறமையானது பருவம், குலம், அழகு, இவற்றைப் பொறுத்ததா? எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? எவரையும் பொருட்படுத்தாது பேசுதல் கூடாது. தாழை மடல் மகிழம்பூவைவிட எவ்வளவோ பெரிதுதான். ஆனுல் மணத்தில் எது சிறந்தது?—கடல் நீர் கரைகாண முடியாமல் கிடக்கின்றது; ஆனுல் செடி கொடிகளுக்குக்கூட அத்தண்ணீரை வார்க்க முடியாதே. அதன் அருகிலுள்ள சிறிய ஊற்று நீர் குடிப்பதற்கேற்றதாகவும் இருக்கக்கூடுமல்லவா?

**வெண்பா**

"மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல் பெரிது
மண்ணீரு மாகா(து) அதனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்."

**மூன்ரு :** [புலவரை நோக்கி] யாரோ கவி பாடுந் திறமையுடையவர்போல் தோன்றுகிறது — அம்மையே! தாங்கள் யாரோ?

**முதலா :** யாண்டிருந்து இங்குற்றீர்?

**அவ்வை :** என்னைப் பற்றிப் பின்னர்த் தெரிந்து கொள்ளலாம். உங்கள் முடிவான கருத்தென்ன? நாலு கோடிச் செய்யுட்கள் நாளைக் காலைக்குள் பாட முடியாதா?

**இரண் :** எங்களால் மட்டுமல்ல. எவராலுமே முடியாது.

அவ்வை : அப்படியாயின், நாளைக் காலை மன்னனுக்கு என்ன மறுமொழி சொல்லப் போகிறீர்கள் ?

மூன்று : எள்ளத்தனையும் சந்தேகமின்றி 'முடியாது' என்று சொல்லிவிடப் போகிறோம்.

அவ்வை : அப்படிச் சொல்வது புலவர் கூட்டத்திற்கே இழுக்கல்லவா ?

முதலா : வேறு வழியின்றேல், யாமென் செய்வோம் ?

அவ்வை : மன்னனைவிட மேம்பட்டவர்களல்லவா புலவர்கள் ?

### வெண்பா

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேய மல்லாற் சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு."

—இச்சிறப்புக்கு ஊனமுண்டாக்கப் போகிறீர்களா ?

இரண் : கூடாதுதான்...வேறு வழியில்லையே......

அவ்வை : சரி, ஒன்று செய்யுங்கள். மன்னன் கேட்கும்பொழுது நான் பாட ஒப்புக் கொண்டிருப்பதாகக் கூறிவிடுங்கள்.

மூன்று : [வியப்புடன்] என்னவிது! உங்களால் முடியுமா !!—அப்படியாயின், நாங்களும் உங்களுடனிருந்து உதவி புரிகிறோம்—இப்பொழுதே எழுத ஆரம்பிக்கலாம். நாலு கோடிக்கு நூறு, ஐம்பது குறைந்தாலும் மோசமில்லை. மன்னனிடம் சொல்லிக் கொள்ளலாம்.

இரண் : என்னையா! உமக்கென்ன மண்டையில் மறை கழன்றுவிட்டதா ? நாலு கோடிச் செய்யுட்கள் எழுதுவதற்கு மட்டும் நாலு மாதம் வேண்டுமே ஐயா—

**அவ்வை :** ஆம். உண்மையே—நான் எழுதாமலே பாடி விடுகிறேன்—

**எல்லோ :** எழுதாமலேயா?......

**அவ்வை :** ஆம்—உங்களைக் கேட்டவுடன் என்னைக் காண்பித்து விடுங்கள். நான் மன்னன் முன் பாடி விடுகிறேன்—தெரிகிறதா? மறந்துவிடப் போகிறீர்கள். முடியாதென்று சொல்லி, புலவர் மரபுக்கே ஊறு செய்து விடாதீர்கள்.

**இரண் :** அம்மையே! இதனால் எங்களுக்கேதேனும் ஆபத்து......

**அவ்வை :** [புன்முறுவலுடன்] நீவீர்தானா புலவர் சிகாமணிகள்!

[போகிறார்]

**முதலா :** புலவீர்! நம்மனோரால் இயலாத இச்செயல் இவ்வம்மையாரால் எங்ஙனம் இயலும்?

**மூன்ற :** அதைப் பற்றி நமக்கென்னையா கவலை?

**நாலா :** அட, கவலைப்பட்டுத்தான் பயனென்ன? நம்மால்தான் முடியாதே. பேசாமல் என்ன நடக்கிறதென்று வேடிக்கை பார்ப்போமே.

**இரண் :** நல்ல முடிவு—அதுதான் முதல்தரமான யோசனை; வாரும்......

[எல்லோரும் போகிறார்கள்]

**காட்சி முடிவு**

## காட்சி 20

**இடம் :** சோழன் கொலுமண்டபம்

**உறுப்பினர் :** அவ்வை, சோழன், புலவர்கள், அமைச்சர்கள்' காவலர்கள் முதலியோர்.

**சோழன் :** [புலவர்களை நோக்கி] புலவர்களே! [அவ்வையைச் சுட்டிக் காட்டி] இம்மூதாட்டியார் யார் என்பதை அறிவீர்களா?...புலமைக் கடல் அவ்வைப் பிராட்டியாராவர்.

[புலவர்கள் எழுந்து அவ்வையை வணங்குதல்]

—இவ்வம்மையார் நேற்று முதல் நமது விருந்தினராக இருக்கிறார்கள். இவர்கள் இங்கு எழுந்தருளியது நமது பாக்கியமே.

**அவ்வை :** வேந்தே! எதிரிலேயே மிகைப்படுத்திப் புகழ்வது நன்றன்று. புலவீர்! ஏதோ, சிறிது பயின்றுள்ளேன்......

[புலவர்கள் திகைப்புறுகின்றனர்]

**முதல் புல :** அரசே! ஈண்டு நேற்றுப் புகன்றவாறு நாலு கோடிச் செய்யுட்களை......

**சோழ :** [இடைமறித்து] எங்கே, பாடிவிட்டீர்களா?

**புலவர் :** ......இல்லை......

**முதல் புல :** எவரும் யாத்தல் அரிதென்ற முடிவுக்கு வந்தோம்.

**சோழ :** [நகைத்து] புலவர்களே! இது இயலாத காரியம் என்பது எனக்கும் தெரியும். எனினும், உங்கள் திறமையைச் சோதிக்கவே இவ்வாறு கூறினேன்.

**அவ்வை :** இறையே! கற்றோரைச் சோதித்துத் தலை குனியச் செய்ய வேண்டுமென்பது உன் எண்ணமா? நீ

உனது அவைக்களப் புலவர்களைக் கேட்ட கேள்வி புலவர் குழு அனைத்திற்கும் உரியதுதான். இது முடியாத செயல் என்பதுதானே உனது நினைவு?

**சோழ:** [வியப்புடன்] அம்மையே! இது தங்களுக் கெப்படித் தெரிந்தது?

**அவ்வை:** புலவர்களால்தான்......

**சோழ:** தாயே! வேடிக்கையாக......ஒரு இரவுக்குள் நாலுகோடிச் செய்யுட்கள் பாடிக்கொண்டு வரமுடியுமா வென்று கேட்டேனேயொழிய வேறல்ல. புலவர் என்ன மறுமொழி கூறுகின்றனரென்பதை அறிய விரும்பினேன்.

**அவ்வை:** சோழ மன்னு! உருக்க உருக்கத்தானே தங்கத்தின் மாற்று உயரும்; அரைக்க அரைக்கத்தானே சந்தனம் மணம் கமழும்; அதேபோன்று, உன்போன்ற மன்னர்களின் நுணுக்கமான கேள்விகளும், சோதனைகளும் தானே புலவர்களின் ஏற்றத்திற்குக் காரணமாய் இருந்து வந்திருக்கின்றன. நீ கேட்டது வேடிக்கையாவே இருப் பினும், உண்மையில் நாலுகோடிச் செய்யுட்கள் பாடிக் கொண்டு வரவேண்டியது புலவர்களின் கடமையே. எனக்கு இச்செய்தியை அறிவித்தவுடன், நானே பாடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

**சோழ:** என்ன! தாங்கள் பாடப் போகிறீர்களா?

**அவ்வை:** ஆம்; கேட்கச் சித்தமாயிருக்கிருயா? பாடுகிறேன்.

**சோழ:** [வியப்புடன்] நாலு கோடி!!

**அவ்வை:** [புன்முறுவலுடன்] நாலு கோடியென்ன? எத்தனை கோடி வேண்டுமாளுலும் பாடுகிறேன்.

**சோழ:** தாயே! தாங்கள் கோடிக்கணக்கான செய்யுட் களைப் பாடவல்லீரென்பதை யானறிவேன். ஆனுல், தாங்கள்

பாடி முடியும்வரை நான் அதைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பது முடியாதே—வேண்டாம்...வேடிக்கை யாகவே கேட்டேன்.

**அவ்வை :** அது முடியாது. நீ கேட்டுத்தான் தீர வேண்டும். பாடவேண்டுமென்பது எப்பொழுது உன் கட்டளையோ, அப்பொழுதே கேட்கச் சித்தமாயிருக்கிறு யென்பதும் அதில் மறைமுகமாகத் தொக்கி நிற்கிற தல்லவா ?—உனது சொல்லைக் காப்பாற்ற வேண்டாமா ?

**சோழ :** அம்மையே ! மன்னிக்க வேண்டும். நாலு கோடிச் செய்யுட்களைப் பாடி முடிக்கும்வரை நான் எங்ஙனம் உட்கார்ந்திருக்க முடியும் ?

**அவ்வை :** அதை உணர வேண்டியவர்கள் புலவர் களாகிய நாங்களன்ருே ?—மன்னன் கட்டளைப்படி பாடவும் வேண்டும்; மன்னன் சலிப்பின்றிக் கேட்கவும் வேண்டுமென்பதை நாங்கள் அறிவோம்—நீ கேட்கும் முறையில் " நாலு கோடி " பாடுகிறேன்.

**சோழ :** பாடுங்கள்......

**அவ்வை :**

" மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மதியாமை கோடி பெறும்."

**சோழ :** ஆஹா ! ஐயமில்லை ; கோடி பெறும்.

**அவ்வை :** ஒரு கோடியாயிற்ரு ?

**புலவர் :** ஆயிற்று......

**அவ்வை :**

" உண்ணீர் உண் ணீரென்றே ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்."

**சோழ :** ஆம். பத்துக்கோடியும் பெறும்.

**அவ்வை :** இரண்டு கோடியாயிற்ரு ?

" கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்."

**சபையோர் :** ஆஹா !......

**அவ்வை :**

" கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்."

—நாலு கோடியாயிற்று. இன்னும் எத்தனை கோடி பாடவேண்டும்?

**சோழ :** [களிப்புடன்] தாயே! இனித் தாங்கள் சிரமமெடுத்துக் கொள்ள வேண்டாம். நாலு கோடியென்று தாங்கள் பாடிய செய்யுட்களே கோடி கோடியும் பெறும். இதற்கு நான் என்ன கைம்மாறு இயற்றவல்லேன் ?

**அவ்வை :** மன்ன! நீ செய்ய வேண்டிய கைம்மாருென்றுளது; தமிழ் நாட்டுக்கு......சிறப்பாக, சோழ நாட்டுக்கே உரித்தான தனிப்பெரும் நாட்டியக் கலையை தமிழர் உள்ளளவும் அழியாது பாதுகாத்து வரவேண்டும்.

**சோழ :** அங்ஙனமே செய்வேன். தங்கள் புலமையின் சின்னமாகிய இச்செய்யுளையும், உலகுள்ளளவும் அழியாது போற்றிவர ஏற்பாடு செய்வேன். வாருங்கள்......

**அவ்வை :** புலவர் சிகாமணிகளே ! வம்மின்......

[சோழன் முன்னும் அவ்வை பின்னுமாகச் செல்ல, சபை கலைகிறது. புலவர்கள் ஒரு புறமாய் தலை குனிந்தபடி நிற்கின்றனர்.]

**காட்சி முடிவு**

# ஔவையும் பாரி மகளிரும்

## காட்சி 21

**இடம் :** *பாரி மகளிர் குடில்*

**உறுப்பினர் :** *அங்கவை, சங்கவை, அவ்வை.*

*[பாரி மகளிரிருவரும் குடிசை வாயில் நின்றுகொண்டிருக்க அவ்வை மழையில் நனைந்த தோற்றத்துடன், குளிர் பொறுக்க முடியாது நடுங்கிக் கொண்டே வருகிறார்]*

**அங்கவை :** ஐயோ பாவம்! தங்காய்! அதோ பார்... யாரோ ஒரு மூதாட்டி நனைந்த உடையுடன் குளிர் பொறுக்க முடியாது தவிக்கிறார்......

*[அவ்வை வந்து திண்ணையில் உட்கார்ந்து]*

**அவ்வை :** அம்மா!......குளிர் பொறுக்க முடியவில்லையே......

**அங்கவை :** தங்காய்! வேறு ஏதாவது உலர்ந்த ஆடையிருக்கிறதா?

**சங்கவை :** ஒன்றுமில்லையே அக்கா.

**அங்கவை :** சரி, நீ உடுத்தியிருக்கும் சிற்றாடையைச் கொடு.

*[சங்கவை உடுத்தியிருந்த நீலச் சிற்றாடையைக் களைந்து அவ்வையிடம் கொடுத்து]*

**சங்கவை :** அம்மையே! இதோ இச்சிற்றாடையை உடுத்திக்கொண்டு அதனைக் களையுங்கள்...

**அவ்வை :** மிகுந்த பசியாயிருக்கிறதம்மா; அதனால் தான் களைப்பு மேலிடுகிறது.

**சங்கவை :** தாயே! வாருங்கள் உணவருந்தலாம்...... எங்களிடம் கூழும் கீரைக்கறியும்தான் இருக்கிறது......

**அவ்வை :** அதுவே அமிழ்தம்...

[மகளிரிருவரும் அவ்வையை உள்ளே அழைத்துச் செல்கின்றனர். சற்றுப் பொறுத்து அங்கவை வெளியில் வந்து அவ்வையின் சேலையைப் பிழிந்து உலரப் போட்டுவிட்டு மீண்டும் உட்செல்கிறாள்—அவ்வை உணவருந்தி, களைப்பு நீங்கி மகளிருடன் வெளியே வருகிறாள்]

**அவ்வை :** அடடா! என்ன சுவை! என்ன சுவை!!

## வெண்பா

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டார்
கடகஞ் செறியாதோ கைக்கு."

[அங்கவை, சங்கவை இருவரையும் அன்புடன் வருடி]

## வெண்பா

"பாரி பறித்த பறியும், பழைய னூர்க்
காரி கொடுத்த களைக்கட்டும்—சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றூடைக்கு நேர்."

**சங்க :** (உற்று நோக்கி) தாயே! தாங்கள் அவ்வை மூதாட்டியாரென வெண்ணுகிறேன். இப்பொழுதுதான் எனக்கு நினைவு வருகிறது. அக்கா! அன்றொரு நாள் நாம் நந்தவனத்தில் விளையாடிக்கொண்டிருந்தபொழுது தந்தையார் இவ்வம்மையை அழைத்து வந்து அறிமுகப்படுத்தவில்லையா?......

**அங்க :** ஆம்! ஆம்! இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வருகிறது......தாயே, வணக்கம்.

[இருவரும் வணங்குகின்றனர்.]

**அவ்வை:** என்ன இது! (வியப்புடன்) முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரியின் மகளிரா நீவிர்?—ஐயோ! மக்காள்! உங்களுக்கு ஏனம்மா இந்நிலை வந்தது?

**அங்க:** [கண் கலங்க] தாயே! செல்வம் நிலையில்லாததென்பது தாங்கள் அறிந்ததுதானே. எங்கள் திருமண விஷயமாக ஏற்பட்ட சண்டை முற்றி, கடைசியில் மூவேந்தர்களும் ஒன்று சேர்ந்து எங்கள் தந்தையைக் கொன்றுவிட்டார்கள்.

**அவ்வை:** மக்காள்! வருந்தாதீர்கள்—அழுவதாற் பயனென்ன? "ஊழிற் பெருவலி யாவுள."

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ?"...

கவலையை விடுங்கள்............நீங்கள் இங்கெப்படி வந்தீர்கள்?

**அங்க:** தாயே! என் தந்தை தன் நண்பரும் எங்கள் குருவுமாகிய கபிலர் பெருமான் கையில் எங்களை ஒப்படைத்துத் தன் குலம் அழியாமல் தழைக்க, எங்களுக்குத் திருமணம் முடித்து வைக்கும்படியாகக் கூறி, யுத்தத்திற்குப் போகு முன்னரே எங்களை அனுப்பி விட்டார்.

**அவ்வை:** அப்படியா! கபிலர் பெருமான் எங்கேயம்மா?

**அங்க:** [கண்ணீர் வடித்து] தாயே! நாங்கள் மகா பாவிகள்; எங்களால் ஒருவருக்கும் நன்மையில்லை. கபிலர் பெருமான் இரண்டொரு அரசர்களிடம் எம்மையழைத்துப் போய் மணம் புரிய வேண்டினர்; அவர்கள் மூவேந்தர்களுக்குப் பயந்து முடியாதென்று கூறிவிட, மனம்

நொந்தவராய், இங்குள்ள ஓர் அந்தணரிடம் எங்களை ஒப்படைத்துத் தகுந்த வரன் வந்து கேட்டால் மணம் செய்து கொடுத்துவிடும்படியாகக் கூறிச் சென்றவர் இன்னும் திரும்பவில்லை. மிகுந்த கஷ்ட நிலைமையில் காலத்தைக் கழித்துக்கொண்டு வருகிறோம். இப்பாவிகள் உயிரும் போகமாட்டேனென்கிறது......

**அவ்வை :** நீங்கள் ஏனம்மா உயிர் துறக்கவேண்டும்? உங்கள் தந்தையின் வள்ளற்றன்மையைப்போல, உங்களுடைய கொடையும் அன்பும் உலகோருக்குப் பயன்பட வேண்டாமா? துன்பத்தை உறுதியுடன் எதிர்த்துப் போராடுவதே அறிஞர் செயல். மனந் தளராதீர்கள். "இடுக்கண் வருங்கால் நகுக!" அதுவே உற்ற துணையாகும்.

**அங்க :** தாயே! இந்தப் பாழும் ஜென்மமே கொடிது. "பெண்ணாய்ப் பிறப்பதைவிட மண்ணாய்ப் பிறப்பதே மேல்" என்பது முற்றிலும் உண்மையே.

**அவ்வை :** மகளே! அவ்வாறு சொல்லாதேயம்மா. வாழ்வும் தாழ்வும் இயற்கையின் விளையாட்டு—இதன் பொருட்டுப் பெண்ணினத்தை இகழாதே......

## பாட்டு

கவிமணி—திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றியது.

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா!

அல்லும் பகலும் உழைப்பவரார்?—உள்ளத்
தன்பு ததும்பி யெழுபவரார்?
கல்லுங் கனியக் கசிந்துருகித்—தெய்வக்
கற்பனை வேண்டித் தொழுபவரார்?—

ஊக்கம் உடைந்தழும் ஏழைகளைக்—காணில்
உள்ளம் உருகித் துடிப்பவரார்?
காக்கவே நோயாளி யண்டையிலே—இரு
கண்ணிமை கொட்டாதிருப்பவரார்?

சிந்திய கண்ணீர் துடைப்பவரார்?—பயம்
சிந்தை யகன்றிடச் செய்பவரார்?
முந்து கவலை பறந்திடவே—ஒரு
முத்தமளிக்க வருபவரார்?

உள்ளந் தளர்வுறும் நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்?
அள்ளியெடுத்து மடியிருத்தி—மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார்?

நீதி நெறியில்லா வம்பருமே—நல்ல
நேர் வழி வந்திடச் செய்பவரார்?
ஓதிய மானமிழந்தவரை—உயர்
உத்தமராக்க முயல்பவரார்?

ஆவி பிரியும் அவ்வேளையிலே—பக்கத்
தன்போடகலா திருப்பவரார்?
பாவி யமனும் வருத்திடாமல்—ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவரார்?

ஏங்கிப் புருஷனைத் தேடியழும்—அந்த
ஏழைக் கிதஞ்சொல்லி வாழ்பவரார்?
தாங்கிய தந்தை யிழந்தவரைத்—தினம்
சந்தோஷமூட்டி வளர்ப்பவரார்?

..............................................................

அன்பினுக்காகவே வாழ்பவரார்?—அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்பவுரைகள் தருபவரார்?—வீட்டை
இன்னகை யாலொளி செய்பவரார்?

இப்பெரு நற்கருமங்களெலாம்—உமக்
கீசன் அளித்த உரிமைகளாம்
மெய்ப்பணி வேறும் உலகிலுண்டோ—இன்னும்
வேண்டிப் பெறும் வரம் ஒன்றுளதோ?

மங்கையராகப் பிறந்ததனுல்—மனம்
வாடித் தளர்ந்து வருந்துவதேன்?
தங்கு புவியில் வளர்ந்திடும்—கற்பகத்
தாருவாய் நிற்பதும் நீரலவோ?......

அம்மா! உலக முழுதும் சக்தி மயமன்றே? சக்தியின் வடிவமாகிய பெண்ணினத்தைத் தாழ்த்திக் கூறுவோர் அறிவிலிகளன்றே? இதை மக்களுக்குணர்த்தவன்றே எம்பெருமானும், "உமையொரு பாகனுய்" அர்த்தநாரீஸ்வரனுய்த் திருக்கோலம் காட்டுகின்முன்.

**அங்க :** தாயே! அறியாமையால் பிதற்றிவிட்டேன். மன்னிக்கவேண்டும்.

**அவ்வை :** குழந்தைகளே! இனி உங்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அங்கவை! இன்றைய பதினெட்டாம் நாள் உனக்குத் திருமணம் நடத்த முடிவு செய்துவிட்டேன். களிப்புற்றிருங்கள். நான் போய் வருகிறேன்......

(தனக்குள்) ஆஹா! வள்ளல் பாரியின் மக்களாயிருந்தமையாலன்றே யான் இன்னுரென்றறியாமுன்னரே உபசரித்து அமுதளித்தனர். "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே."

**வெண்பா**

"ஆற்றுப் பெருக்கற்(று) அடிசுடுமந் நாளும் அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்-ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலும்
இல்லையென மாட்டார் இசைந்து."

[போகிருள்]

## காட்சி 22

**இடம் :** தெய்வீகன் அரண்மனை

**உறுப்பினர் :** அவ்வை, தெய்வீகன்

[அவ்வையும் தெய்வீகனும் சந்திக்கின்றனர்]

**தெய் :** அம்மையே! வணக்கம்; அடியேனை நாடி வந்த காரணமெதுவோ?

**அவ்வை :** கோவலூர்மன்னு! யான் கவிபாடவோ, அன்றிப் பரிசில் பெறவோ வரவில்லை. கிடைத்தற்கரிய ஒரு பொருளை உனக்குக் கொடுக்க வெண்ணி வந்தேன்.

**தெய் :** தங்கள் பொன் மொழிகளை விடவா அரிய பொருள்?

**அவ்வை :** மன்னு! பாரியின் மகளிரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றனையா?

**தெய் :** ஆஹா! மகா ரூபவதிகள்; கல்விக் களஞ்சியங்கள்!

**அவ்வை :** அவர்களில் ஒருத்தியான அங்கவையை நீ மணந்துகொள்ளவேண்டும்.

**தெய் :** அம்மையே! பாரியின் மரணச் செய்தியைத் தாங்கள் அறிந்திருக்கலாம். மூவேந்தர்களும் சேர்ந்தே பாரியைக் கொன்றுர்கள். நானோ ஒரு சிற்றரசன்........ பாரியின் பெண்ணை நான் மணந்தால் அவர்கள் என்மீது பகைகொண்டு சண்டைக்கு வந்துவிடுவார்களே...

**அவ்வை :** வேந்தே! பாரியின் பகைமையை மூவேந்தர்களும் இன்னுமா உள்ளத்தில் ஊன்றி வைத்திருப்பார்கள்?......ஆஹா! உன் அழகிற்கும், பண்புக்கும், அங்கவைக்கு நிகரான பெண்ணுமுண்டா?

**தெய் :** தாயே! தாங்கள் சொல்வது முற்றும் உண்மையே. அங்கவையை நான் அடைவது கிடைத்தற்கரிய பாக்கியம்தான். மூவேந்தர்களும் இந்த மணத்தை ஒப்புக்கொள்ளவேண்டுமே; பாரியின் மகளிர் எல்லோருக்கும் தெரிந்தவர்களாயிற்றே ; இதைக் குற்றமாகக் கொண்டு என்னைத் தொலைக்க வந்துவிட்டால்?......இப்பொழுதோ நட்புடனிருக்கிறார்கள்......

**அவ்வை :** மன்னா! மூவேந்தர்களும் இத்திருமணத்திற்கு வந்து வாழ்த்திச் செல்லும் வண்ணம் யான் செய்கிறேன்.

**தெய் :** [களிப்புடன்] அப்படியாயின், மட்டற்ற மகிழ்ச்சியுடன் மணந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

**அவ்வை :** சரி, இன்றைய பதினெட்டாம் நாள் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய். யான் சென்று வருகிறேன்.

[விரைந்து போகிறாள்]

**காட்சி முடிவு**

## காட்சி 23

**இடம் :** காடு

**உறுப்பினர் :** அவ்வை, விநாயகர், வனதேவதை

[அவ்வை தனியே நின்று விநாயகரை வணங்குகிறாள்]

**அவ்வை :** ஏ, பிரணவப் பொருளே! ஆதி மூலா! இவ்வமயம் நீதான் முன்வந்து என்னெண்ணத்தை ஈடேற்றவேண்டும். நினது திருக்கரத்தால் மூவேந்தர்கட்கும் திருமணவோலை எழுதித்தர வேண்டுகிறேன்.

## வெண்பா

"ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணுல வோலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து."

[விநாயகர் தோன்றி ஆசீர்வதித்து]

**விநா:** அவ்வையே! என்ன எழுத வேண்டும், சொல்லு.

**அவ்வை:** ஆஹா! என்னே நின் கருணை!! இதோ தெரிவிக்கிறேன்.

[அவ்வை சொல்லிக்கொண்டேவர, விநாயகர் எழுதுகிறார்]

—பாண்டிய மன்னனுக்கு.........

## வெண்பா

"வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பானுள்
ஈண்டு வருக இசைந்து."

—சோழ மன்னனுக்கு......

"புகார்மன்னன் பொன்னிப் புனனுடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்."

—சேர மன்னனுக்கு......

"சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமிசைந்தான்
சங்கியா தேவருகத் தான்."

[விநாயகர் எழுதி முடித்து ஓலைகளை அவ்வையிடமளித்து மறைகிறார்]

**அவ்வை:** ஏ வனதேவதையே!

[வனதேவதை தோன்ற]

இத்திருமண வோலைகள் மூன்றையும் தமிழ் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் இப்பொழுதே சேர்ப்பித்துவிட வேண்டுகிறேன்.

**வன:** அம்மையே! உமது கோரிக்கை இனிது நிறைவேறும்; இப்பொழுதே சேர்ப்பித்துவிடுகிறேன்.

[ஓலைகளைப் பெற்றுக்கொண்டு மறைகிறது]

**காட்சி முடிவு**

## காட்சி 24

**இடம்:** திருமணவறை

**உறுப்பினர்:** மூவேந்தர்கள், அவ்வை, பாரி மகளிர், தெய்வீகன், புலவர்கள் முதலியோர்

[தெய்வீகன், அங்கவையுடன் மணவறையில் வீற்றிருக்க ஏனையோர் இருபுறமும் குழுமி நிற்கின்றனர்]

**அவ்வை:** தமிழ் மூவேந்தர்களே! அன்பர்களே! நீங்கள் எல்லோரும் இக்கிழவியின் வேண்டுகோளுக்கிசைய இங்கெழுந்தருளியமைக்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். மணமக்கள் நீடுழி வாழ அறுகிட்டு வாழ்த்துங்கள்.

[தெய்வீகன் அங்கவைக்கு மங்கல நாண் பூட்ட எல்லோரும் அறுகிட்டு வாழ்த்துகின்றனர்—மணமக்கள் வந்து அவ்வையை வணங்குகிறார்கள்]

அவ்வை:

வெண்பா

"ஆயன் பதியில் அரன்பதிவந் துற்(று) அளகம்
மாயனூ துங்கருவீ யானாலும்—தூயமணிக்
குன்று போல் வீறு குணமுடையாள் தன்னுடநீ
இன்றுபோல் என்று மிரு."

[ஆயன்பதி — ஆலிலை. அரன்பதி—மலை. அளகம் — கூந்தல். மாயனூ துங்கருவி—வெண் சங்கு]

[பொருள்:—ஆலிலை போன்ற வயிற்றில் மலை போன்ற முலைகள்பட்டு, கூந்தல் வெண்மை நிறமாகி, வயோதிகப் பருவத்தை யடைந்தாலும்......இன்று உனக்கு அவள் பாலுள்ள அன்பு என்றும் மாருதிருக்கக் கடவது]

[மணமக்கள் மூவேந்தர்களைப் பணிய அவர்கள் வாழ்த்துகின்றனர்]

அவ்வை: மூவேந்தர்களே! நீங்கள் எக்காலத்தும் தெய்வீக மன்னனுடன் நட்பினராயிருப்பீர்களென்றே நினைக்கிறேன்.

மூவரும்: தடையென்ன? நிச்சயமாக நம்பலாம்.

சேரன்: சரி, நாங்கள் வருகிறோம்; தங்கள் கோரிக்கை தான் நிறைவேறிவிட்டதே.

அவ்வை: அவ்வாறன்று; நீவிர் மூவரும் இங்கிருந்து இக் கிழவியால் கொடுக்கப்படும் உணவையருந்திச் செல்ல வேண்டும்.

மூவேந்தர்: உணவைப்பற்றியென்ன?......

அவ்வை: ஏன்? அரசர்களுக்கேற்ற உணவு என்னால் அளிக்க முடியாதென்றா?

[மூவேந்தர்களும் கூடி யோசிக்கின்றனர்]

சேரன்: பனம்பழம் கிடைக்குமா? கிடைத்தால் உண்ணலாம்.

**அவ்வை:** உங்கள் மூவருக்கும் பனம்பழம்தான் வேண்டுமோ?

**மூவரும் :** ஆம்......

**அவ்வை :** இந்த ஒருவகையிலாவது உங்களுக்குள் ஒற்றுமை காணப்படுகிறதே! — மூவேந்தர்களே! இவ் வமயத்தில் உங்களுக்குப் பனம்பழத்தின் மீதா விருப்பமுண் டாகிவிட்டது?— இது பனம்பழம் உண்டாவதற்குரிய காலமன்று எனவெண்ணித்தானே கேட்கின்றீர்கள்?— யான் உங்களுக்குப் பனம் பழம் தருகிறேன்.

[ஒரு பனந்துண்டை பூமியில் நட்டு]

"திங்கட் குடையுடைச் சேரனும், சோழனும், பாண்டியனும்,
மங்கைக்(கு) அறுகிட வந்துநின் றூர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே"

[மூன்று பழத்துடன் பனைமரம் உண்டாகிவிடுகிறது. எல்லோரும் வியப்புறுகின்றனர். அவ்வை பழங்களைப் பறித்து மூவேந்தர்களுக்கும் கொடுக்கிறாள்]

**சேரன்:** தாயே! தங்களின் பெருமையே பெருமை! தங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகி றோம்?

**அவ்வை:** நீங்கள் செய்ய வேண்டிய கைம்மாறு ஒன்றுளது.

[மூன்று சுவடிக்கட்டுகளை மூவேந்தர்களிடம் கொடுத்து]

—இதில் சிறுவர் ஈருக, மாநில மக்கள் அனைவருக்கும் பயன் படத்தக்க வண்ணம் ஒழுக்க முறைகளையும், நன்னெறிகளை யும், எனது சிற்றறிவிற்கெட்டிய வரையில் சொல்லி இருக் கிறேன். இதனை உங்கள் ஆளுகைக்குட்பட்ட செந்தமிழ் நாட்டில் நன்கு பரப்பி, மக்களெல்லாம் நன்னெறி கடைப்

பிடித்தொழுகுமாறு செய்தல் வேண்டும். இதில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, ஞானக்குறள் முதலிய பல அரிய பொருட்கள் அடங்கியுள்ளன.

**மூவரும் :** தாயே! இத்திருப்பணியை மகிழ்ச்சியுடன் செய்வோம்.

**சேரன் :** அம்மையே! தங்கள் திருவாயால் சந்தேகத்திற்கிடமான ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்த வேண்டும்.

**அவ்வை :** யாதோ?

**சேரன் :** சேர, சோழ, பாண்டிய நாடுகளில் யாருடைய ஆளுகைக்குட்பட்ட நாடு அதிகச் சிறப்புடையது?

**அவ்வை:** [புன்முறுவலுடன்] ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையது என்று சொல்லலாமே யொழிய ஒன்றைவிட மற்றொன்று சிறப்புடையதெனக் கூறுவதற்கில்லை.

**மூவரும்:** எப்படி?

**அவ்வை:**

**வெண்பா**

"வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து."

**மூவரும்:** ஆஹா! என்ன புலமைத்திறம்.

**அவ்வை:** வாருங்கள்...உணவருந்தச் செல்வோம்.

[எல்லோரும் புறப்படுகின்றனர்]

**காட்சி முடிவு**

## ஔவையும் முருகனும்

### காட்சி 25

**இடம்:** காடு.

**உறுப்பினர்:** அவ்வை, சிறுவன், (முருகவேள்)

*[மாடு மேய்க்கும் சிறுவனொருவன் நாவல் மரத்தின்மீது உட்கார்ந்து, நாவற்கனிகள் பறித்துத் தின்றுகொண்டிருக்கிறான்; அவ்வழி வந்த அவ்வையார் அவனைப் பார்க்கிறார்.]*

**அவ்வை:** என்னப்பா தின்கிறாய்?

**சிறுவன்:** நவ்வாப் பழம்...

**அவ்வை:** [ஆவலுடன்] எனக்கு இரண்டு நாவற் பழம் பறித்துப் போடேன்...

**சிறுவன்:** ஏ கெழவி! உனக்குச் சுட்ட பழம் வேணுமா? சுடாத பழம் வேணுமா?

**அவ்வை:** [யோசனையுடன்] பழத்தில் சுடாத பழம், சுடுகிற பழம் என்று இருவகைப் பழங்களிருக்கிறதா?

**சிறுவன்:** ஓ! இருக்குதே.

**அவ்வை:** சரி, சுடுகிற பழம் எனக்கு வேண்டாம்; சுடாத பழந்தான் போடு.

**சிறுவன்:** [மரக் கிளையை உலுக்கி] பாத்து சுடாத பழமா எடுத்துக்கோ.

*[மரத்திலிருந்து காயும், கனியுமாக உதிருகின்றன. அவ்வை கனிந்த பழங்களைப் பொறுக்கியெடுத்து, அவற்றில் கீழேயிருந்த மணல் ஒட்டிக்கொண்டிருந்தது கண்டு வாயால் ஊதி மணலை அகற்ற முயல்கிறாள்.]*

**சிறுவன்:** [நகைத்து] ஏ கெழவி! நல்லா ஊதி ஆறினதுக்கு அப்புறம் சாப்பிடு—வாய் வெந்துடப் போவுது—ஆமா...நீ சுடாத பழந்தானே கேட்டே. பின்னெ என்னுத்துக்கு சுட்ட பழத்தை எடுத்தே?

**அவ்வை:** [வெட்கித் தலை குனிந்து, தனக்குள்] அடடா! நான் எவ்வளவு கற்றிருந்தென்ன பயன்? இந்தச் சிறுவன் கேட்ட கேள்வியின் உட்பொருள் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!...சுட்ட பழம், சுடாத பழமென்பது, கனிந்த பழத்திற்கும் காய்க்குமாகச் சொன்னனென்பது இப்பொழுதன்றோ தெரிகிறது. சீ, என்ன மானக் கேடு!...

### வெண்பா

"கருங்காலிக் கட்டைக்கு நாணுக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவுந் துஞ்சாதென் கண்"

—இதை நான் என்றுமே மறக்க முடியாது எம் பிரானே.

[சிறுவனுயிருந்த முருகவேள் தனது திருக்கோலத்துடன் காட்சியளிக்கிருர்]

—ஆஹா! [இருகரங்கூப்பி] முருகப் பெருமானே...

**முருகன்:** அவ்வையே! யான் உம்முடன் விளையாட வந்தேனேயன்றி, இகழுவதற்கன்று. வருந்தல் வேண்டா. உலகில் உமக்கிணையான புலமைத் திறமுடையோர் ஒருவரும் இல்லை...உமது திருவாயால் உலகோர்க்குப் பயன்படும் நீதிகளைத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

**அவ்வை:** எம்பிரானே! ஏழை என்ன சொல்லப் போகிறேன்?...நின் கருணை பிறக்குமாயின், விடையளிக்க அடியாள் காத்துக்கொண்டிருக்கிறேன்.

**முருகன்:** உலகில் யாவற்றிலும் கொடியது யாது?

**அவ்வை:** **"கொடியது"**

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது இன்புற அவர்கையில்
உண்பது தானே.

**முருகன்:** ஆஹா! மிகத் தெளிவாகச் சொன்னீர்... இனியது யாது?

**அவ்வை:** **"இனியது"**

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளாரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

**முருகன்:** ஆம், ஆம்...உண்மை—அதனால்தானே நான் இங்கு வந்தேன்—சரி, அரியது யாது?

**அவ்வை.** **"அரியது"**

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தாஞ்செயல் அரிது
தானமும் தவமும் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

**முருகன் :** பெரியது யாது?

**அவ்வை :** **"பெரியது"**

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான் முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

**முருகன் :** ஆஹா! அவ்வையே! உம்மால் சொல்லப் பட்ட இந்நான்கு பொன்மொழிகளே தர்மார்த்தங்களில் ஒழுக ஒருவனுக்குப் போதுமானது; நான் வருகிறேன்.

**அவ்வை :** முருகப்பெருமானே! நின் கருணையை என்னென்பேன்!!

[முருகவேள் மறைகிறார்]

**காட்சி முடிவு**

## காட்சி 26

**இடம் :** விநாயகர் கோவில்,

**உறுப்பினர் :** அவ்வை, பிள்ளையார்

[அவ்வை விரைவுடன் பூஜைசெய்துகொண்டிருக்கிருர்]

**விநா :** அவ்வையே! ஏன் இவ்வளவு அவசரம்?

**அவ்வை :** பிள்ளையாரப்பனே! யான் உலகுக்காற்ற வேண்டிய தொண்டினைச் செய்துவிட்டேன். எனது பூதவுடல் மறையுங்காலம் கிட்டிவிட்டது. சேரமான் பெருமாள் நாயனுரும், சுந்தரமூர்த்தி நாயனுரும் திருக்கைலாயத்திற்குச் செல்லுகின்றனர்; என்னையும் உடன் வரும்படியாக அழைத்தனர்; ஆதலின், யான் விரைவில் பூஜையை முடித்துக்கொண்டு அவர்களுடன் திருக்கைலாயம் செல்ல விடையளிக்க வேண்டுகிறேன்.

**விநா :** செந்தமிழ்ச் செல்வியே! நான் அவர்களுக்கு முன் உன்னைக் கைலாயத்தில் சேர்ப்பிக்கிறேன். நிதானமாகப் பூஜை செய்.

**அவ்வை :** [வணங்கி] என்னே நினது பேரன்பு!!

### அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பும் பலவிசை பாடப்
பொன்னரைஞ் ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னம ருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்.
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்,
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்,

மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டும்.

[அவ்வை பாடி முடிந்ததும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்கின்றன.]

முற்றிற்று